பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 2 சனிக்கிழமை (15.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 110

# இலங்கை மனித உரிமை மீறல் குறித்த அறிக்கை சரியானதே என்கிறது அமெரிக்கா

## அடித்துச் சொல்கிறார் தூதுவர் பிளேக்



கொழும்பு,மார்ச்15

**இலங்கையில் மனித உரிமைகள் மோசமான முறையில் மீறப்படுவதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சு கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை சரியானதே என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.**

**கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று விடுத்த அறிக்கையில் தமது நிலைப்பாடு அச்சொட்டானது என்று அடித்துக் கூறியிருக்கிறது. அதனை ஊர்ஜிதம் செய்திருக்கிறது.**



அமெரிக்க தூதரக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

2007ஆம் ஆண்டுக்கான அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் அறிக்கை குறித்து இன்று (வெள்ளிக்கிழமை) வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவும், கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்கும் ஆக்கபூர்வமான முறையில் கலந்துரையாடினர்.

அமெரிக்க அரசின் அறிக்கை சரியானதே என்ற நிலைப்பாட்டை அமெரிக்கத் தூதுவர் உறுதி செய்தார்.

196 நாடுகளில் நிலவும் மனித உரிமை நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிட்ட அறிக்கை சரியானதும், நியாயமானதும் நல்நோக்கம் கொண்டதுமாகும்.

நாங்கள் தவறுகள் விட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட அரசுகள் கருதினால் அவை குறித்துத் தெரியப்படுத்துவதை நாம் வரவேற்கிறோம். (12ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டாஞ்சேனையில் கடத்தப்பட்டவர்கள் நான்காம் மாடியில்

கொழும்பு,மார்ச்15

கொழும்பு, புறக்கோட்டை ரயில் நிலையப் பகுதியிலும் மற்றும் கொட்டாஞ்சேனை கல்பொத்த வீதியிலும் வைத்து நேற்று முன்தினம் காலை வெள்ளை வானில் கடத்தப்பட்ட இருவரும் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

- இவ்வாறு வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்ப பயிற்சிப் பிரதி அமைச்சரும் மலையக முன்னணியின் கொழும்பு மாவட்டத் தலைவர் பெ. இராதாகிருஷ்ணனிடம் குற்றப்புலனாய்வுத்துறை பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர் என அவரது ஊடகப்பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினியின் மற்றொரு ஊழியர் நேற்றுக் கடுமையாகத் தாக்கப்பட்டார்!

கொழும்பு,மார்ச் 15

இலங்கை 'ரூபவாஹினி' கூட்டுத்தாபனத்தின் மற்றொரு ஊழியர் மோசமாகத் தாக்கப்பட்டிருக்கின்றார். இந்த முறை தாக்குதலுக்கு இலக்கானவர் ஜே.வி.பியின் தொழிற்சங்கப் பிரிவுக்குக் பொறுப்பானவர் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தை அடுத்து ரூபவாஹினி ஊழியர்கள் தமது பணியிடங்களிலேயே பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் ரூபவாஹினியின் வழமையான செயற்பாடுகள் நெருக்கடிக்குள் மூழ்கின.

ரூபவாஹினியின் செய்தி ஒளிபரப்புப் பிரிவைத் தவிர்ந்த ஏனைய பிரிவின் பணியாளர்களே பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அவர்கள் கடமைக்குச் சமுகம் தந்திருந்தபோதிலும் வழமையான பணி நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நேற்றுக் காலை முதல் ஒளிபரப்பப்படவேண்டிய பல நேரடி நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டன. பொதுவான - முன்னரே பதிவு செய்யப்பட்ட - நிகழ்ச்சிகளே ஒளிபரப்பாகின.

ஜே.வி.பியை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கத் தலைவரான அநுரசிறி ஹெட்டிகே என்பவரே நேற்றுக்காலை 7.45 மணிக்கு தமது வீட்டிலிருந்து அலுவலகத்துக்கு வருவதற்காக கொழும்பு, கொட்டிகஹவத்தையில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த சமயம் அங்குவந்த இனந்தெரியாத குழுவினரால் பொல்லுகளாலும் கட்டைகளாலும் நையப்புடைக்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

படுகாயமடைந்த ஹெட்டிகே கொழும்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்டான்குளத்தில் தமிழ் இளைஞர் சுட்டுக் கொலை

திருகோணமலை,மார்ச் 15

திருகோணமலை நகருக்கு வெளியே, திருகோணமலை - கண்டி வீதியில் உள்ள ஆண்டான்குளப் பகுதியில் இனந்தெரியாத நபர்கள் நேற்று முன்தினம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 35 வயது மதிக்கத்தக்க தமிழ் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் அவரது வீட்டிற்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் அவரை வெளியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுக்குச் சவால் விடுகிறார் பிள்ளையான்!

### அமெரிக்காவையும் அவர் கண்டிக்கிறார்

கொழும்பு,மார்ச் 15

பிள்ளையான் குழு (தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு) சிறுவர்களைப் படையணிகளில் சேர்க்கும் ஆயுதக் குழுவென அமெரிக்க வெளிவிவகார அமைச்சும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவிக்கும் கருத்தை முழுமையாகப் பிழையான தகவலென அந்த அமைப்பின் தலைவரான பிள்ளையான் (சிவநேசதுரை சந்திரகாந்தன்) கண்டித்துள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனைக் குறிப்பிட்டுள்ள அவர், எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு சவால் விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களுடன் மக்களுக்காகப் பணியாற்ற விரும்பியமையாலேயே தாங்கள் ஜனநாயக

(12ஆம் பக்கம் பார்க்க)

## 2004 இற்குப் பின் பெற்ற வெளிநாட்டுக் கடன் ஒரு லட்சத்து இருபதாயிரம் கோடி ரூபாவாம்!

### குட்டை அம்பலப்படுத்துகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு,மார்ச் 15

இலங்கை சுதந்திரமடைந்தது முதல் இப்போது வரை இலங்கை பெற்றுள்ள மொத்த வெளிநாட்டுக்கடன் 3 லட்சத்து 32 ஆயிரம் கோடி ரூபா என்று ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

2004 ஆம் ஆண்டுவரை இந்நாடு பெற்றிருந்த வெளிநாட்டுக் கடன் 2 லட்சத்து 12 ஆயிரம் கோடி ரூபாவாக இருந்தது.

தற்போதைய கடன் 3 லட்சத்து 32 ஆயிரம் கோடி ரூபாவாகும். 2004 இல் இருந்து இப்போது வரை ஒரு லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபா கடன் இந்த அரசால் பெறப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான ரவி கருணாநாயக்க நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:- (12ஆம் பக்கம் பார்க்க)

## அல்லைப்பிட்டியில் படகு மீது சூடு! ஒருவர் பலி; மற்றொருவர் காயம்!!

### நேற்று அதிகாலை சம்பவம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

அல்லைப்பிட்டிக் கரையை நோக்கி நேற்று அதிகாலை வந்து கொண்டிருந்த படகுமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் காயமடைந்தார்.

வன்னியில் இருந்து வந்ததாகக் கூறப்படும் பொதுமக்களுடன் வந்த படகே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகத் தெரியவருகிறது.

ஊர்காவற்துறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் சம்பவ இடத்தில் நேற்று விசாரணைகளை நடத்தினார்.

தமது பகுதியை நோக்கி வந்த சந்தேகத்துக்குரிய படகு மீது தாக்குதல் நடத்தியதாக படைத்தரப்பு விசாரணையில் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவரின் சடலத்தைப் பார்வையிட்ட நீதிவான் சடலத்தை யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

இச்சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

படகில் இருந்த ஏனையோர் ஊர்காவற்றுறைப் பொலிஸிஸ் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவதாக அறியவந்தது. (12ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி தெற்கில் 99இல் கைவிடப்பட்ட 2000 மாடுகள் படையினரால் இன்று கையளிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்15

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு, மறவன்புலோ பகுதிகளில் 99ஆம் ஆண்டு பொதுமக்களால் கைவிடப்பட்ட மாடுகள் அவற்றின் சந்ததிகள் என்று 2000 மாடுகள் இன்று உரியவர்களிடம் இராணுவத்தினரால் கையளிக்கப்பட உள்ளன.

இக்கையளிப்பு நிகழ்வு அந்தப் பிரதேசத்தில் முன்னர் பணியாற்றிய கிராம சேவையாளர்களின் பிரசன்னத்தில் இன்று 8மணிக்கு நுணாவில் மத்தி கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் இடம்பெறவுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயமாக அந்தப் பிரதேசம் 1999ஆம் ஆண்டு மார்கழி மாதம் 13ஆம் திகதி பிரகடனம் செய்யப்பட்ட பின்னர் அப்பகுதியில் இருந்து மக்கள் வெளியேறினர். அவர்கள் தமது பட்டிகளிலும் வீடுகளிலும் வளர்த்த மாடுகளை கைவிட்டு இடம்பெயர்ந்தனர்.

படையினரின் பராமரிப்பில் இருந்த அந்த மாடுகள் இனப்பெருக்கத்தின்மூலம் சுமார் 2ஆயிரம் எருதுகள், பசுக்கள், கன்றுகளாக எண்ணிக்கையில் அதிகரித்துள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

# குறைந்த கப்பல் கட்டணத்துடன் வெங்காயத்தை தெற்கே எடுத்துச்செல்ல செயலகக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம்,மார்ச்15

குடாநாட்டில் வெங்காய உற்பத்தியை அதிகரித்து, குறைந்த கப்பல் கட்டணத்துடன் தெற்குக்கு எடுத்துச் செல்வதென யாழ். செயலகத்தில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்திப் பொருள்களை தென்பகுதிக்கு கப்பல் மூலம் அனுப்புவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை யாழ்.செயலகத்தில் இடம் பெற்றது. அப்போதே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இப்போதைக்குப் புகையிலை மற்றும் வாழைப் பழத்தை தெற்குக்கு எடுத்துச்செல்வதை தவிர்ப்பது எனவும் முடிவு செய்யப்பட்ட து.

அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்கள், கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், கப் பல் கம்பனி முகவர்கள், உள்ளூர் உற்பத்திப் பொருள்களை கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பும் முகவர்கள் உட் பட பலர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் (12ஆம் பக்கம் பார்க்க)

# தொழில்நுட்பவியலாளர், படவரைஞர் பதவிகளுக்கு தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

வடக்கு மாகாண சபையால் தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் படவரைஞர் ஆகிய பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரம் வெளியாகியுள்ளது.

இவர்கள் அனைவரும் எதிர்வரும் 24ஆம் திகதி மாகாண சபையில் தமது விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.

இதன் பின்னர் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் என்று பிராந்திய ஆணையாளர் தெரிவித்துள்ளார். தெரிவு செய்யப்பட்டவர்களுக்குக் கடிதங்கள் அவர்களது சொந்த முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் - அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திணைக் களத்தில் அவர்கள் சமுகமளிக்கவேண்டும் என்றும் - பிராந்திய ஆணையாளர் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

தொழில்நுட்பவியலாளர்கள்

பூ.சுப்பிரமணியசிவம்(கோண்டாவில்), திருமதி சி.கிருஸ்ணமணி(யாழ்ப்பாணம்), தி.சுரேஸ்(சாவகச்சேரி), சி.செந்தூரன்(சுன்னாகம்), அ.ஸ்ரீசிவகாமி(திருநெல்வேலி வடக்கு), த.கோகிலவதனன் (சாவகச்சேரி), சு.கோகுலன்(புலோலி மேற்கு), வி.கஜன்(திருநெல்வேலி கிழக்கு), ச.இளங்கீரன்(கரவெட்டி), பு.கஜேந்திரன்(கொக்குவில்), ம.சுதாகர்(கரவெட்டி), ம.ரகசீலன் (பருத்தித்துறை), இ.சுகந்தன்(யாழ்ப்பாணம்), இ.தயானந்தி(யாழ்ப்பாணம்), அ.கோபாலகிருஷ்ணன் (காரைநகர்), தி.தரணீதன்(திருநெல்வேலி கிழக்கு), செ.விசாகன்(வவுனியா), சி.தவனேஸ் (அரியாலை மேற்கு), க.செந்தீபன்(சாவகச்சேரி), த.மயூரன் (வல்வெட்டித்துறை), செ.செல்வகுமார்(வவுனியா), சி.சுரேஸ்குமார் (கொக்குவில்), செ.சுதாகரன் (அல்வாய்), க.காவேரி (யாழ்ப்பாணம்), கு.பரிபூரணை(உடுப்பிட்டி), இ.குகதாசன்(கரவெட்டி), ஜெ.ரதீசன்(யாழ்ப்பாணம்), கு. பாலகிருஷ்ணா(சுழிபுரம்), இ.சிவகுமார் (சண்டிலிப்பாய்), ந.மனோ கரன்(திருநெல்வேலி மேற்கு), இ.ராஜகாந்தன் (கோண்டாவில்), இ.மயூரதன் (தொண்டமானாறு), ஜெ.மேனகா (சுழிபுரம்), சு.மகேஸ்வரன் (திருகோணமலை), செ.சஞ்சயன்(வவுனியா), சி.சிவபாலன் (வவுனியா), ச.சுதாகர் (வவுனியா), மி.நிக்சன்(மன்னார்), த.தனுஜன்(வவுனியா), கிருபானந்தன்(வவுனியா), த.லவன்(வவுனியா), சி.கணநாதன் (வவுனியா), கு.செந்தூரன்(வவுனியா), க.லிங்கேஸ்வரன் (வவுனியா), ச.சுபாஷ் (வவுனியா), தி.கஜேந்தி (வவுனியா), இ. மோஸ்சிபவன் (வவுனியா), ஆ.ரகுணன் (முள்ளியவளை), ம.தேவகரன்(வவுனியா), ஞா.வேணுதாசன்(மன்னார்), அ.கோசலா (வவுனியா), மு.ஜமுனா (நீர்வேலி), த.ஜெகன்(சாவகச்சேரி), ஞா.யூட்அல்போன்ஸ் (குருநகர்), இ.சுரேஸ்குமார் (கோண்டா வில்), அ.ஜீவானந்தம் (கொடிகாமம்), ஜெ.காயத்திரி (வவுனியா)

படவரைஞர்

ந.அகிலன்(கொக்குவில்), மீ.ஜெபசீலன்(பருத்தித்துறை), சு.சுதர்சன்(மானிப்பாய்), சி.தாரகா(கோப்பாய்), இ.கஜேந்தினி (சாவகச்சேரி), அ.அபிராமி(மானிப் பாய்), ம.கோபிகிருஷ்ணா(கைதடி), தி. கவிதா (பருத்தித்துறை), சி.சிவகரன் (சுன்னாகம்), சி.சுமந்திரன்(சுன்னாகம்), ப. யோகச்சந்திரன்(யாழ்ப்பாணம்), சு. வாகீசன்(அச்சுவேலி), செ.சதானந்தன் (அல்வாய்), ச. கார்த்தீபன்(இணுவில்), பா.பிரதீபன் (கரவெட்டி), பு.முகுந்தன் (காரைநகர்), ர. யாழினி (புலோலி தெற்கு) (203)

# ஹொக்கிப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ்.ஹொக்கிச் சங்கத்தின் அனுசரணையுடன் சுன்னாகம் றோட்டரக் கழகம் அமரர் றொஹான் இராஜசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக ஹொக்கிச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்துகின்றது.

யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு -

✱தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் வி.க. எதிர் கோப்பாய் ஐக்கிய வி.க.

✱ யாழ்.பல்கலைக்கழக அணி எதிர் உடற்கல்வி 'வெள்ளை' அணி. (1-86)

## கண்ணீர் அஞ்சலி



செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் காரைநகர் பிரிவினது தற்காலிக செயலாளராக இருந்து மக்களுக்குச் சிறந்த சேவையாற்றிய

**ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர்**

அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும், எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்து அன்னாரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள், சங்க உறுப்பினர்கள், தொண்டர்கள், ஊழியர்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை. (a)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஆண்டியப்பர் வள்ளியம்மாள்

DR.V.ஆண்டியப்பரின் மனைவி வள்ளியம்மாள் நேற்று (14.03. 2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2008) சனிக்கிழமை பருத்தித்துறை, விநாயகமுதலியார் லேனிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
DR.V. ஆண்டியப்பர்
(கணவர்)

(b)

### திருமதி கனகம்மா யோகராஜா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா யோகராஜா நேற்று (14.03.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வீரபாகு - ஆச்சிக்குட்டி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற யோகராஜாவின் (புகையிரத திணைக்கள ஊழியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சற்குணேஸ்வரி, குமாரதாஸ் (ஓய்வு பெற்ற மின்சார சபை ஊழியர்), வைகுந்தவாசன், புஸ்பகலாதேவி, மனோராணி, புனிதராணி, மகேந்திரன் (யாழ்.மேலதிக மாகாண கல்வி அலுவலகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர்களான தங்கம்மா, செல்லம்மா, கோவிந்தபிள்ளை, பொன்னுத்துரை, நல்லம்மா மற்றும் செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் கனகலக்ஷிமி, மீனா, கமலநாதன், கந்தசாமி (வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்), தேவநாதன், தனுஷியா ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவிச்சந்திரன், ஜெயசந்திரன், கௌசல்யா, சசிகலா, விஜிதா, அமரர் கஜேந்தினி மற்றும் சர்மினி, மிரோசா, கவிதா, லிங்காகரன், தர்சினி, ரஜனி, சுதாஜினி, நிரூஷன், தர்ஷன், தனுஷன், காண்டீபன், மயூரிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.52, மலர்மகள் வீதி, அரியாலை இல்லத்தில் இன்று (15.03.2008) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.52, மலர்மகள் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (c)

தகவல்
குடும்பத்தினர்.


**விற்பனைக்கு**

SHELL GAS வெற்றுச் சிலிண்டர்கள், MD-90 Motor Cycle, மின்தராசு,Gas Cooker, மீன் தொட்டி,Tiger Generator, 3 HP Single phase Motor,oven, தேங்காய் திருவும் மோட்டார், சாப்பாட்டுக் கடைக்குரிய GAS Cooker, பெரிய தாச்சி, தையல் மெசின், Air Compreser, Welding Mechine(160C), Dish Antenna.

தொடர்பு:- S.பிறேம்,
No.18, றக்கா றோட், யாழ்ப்பாணம். T.P:9201

*இதோ உங்களுக்காக!*

குறைந்த கட்டணத்தில் இன்ரநெற் அழைப்பு, ஈமெயில் மூலம் படம் அனுப்புதல், ஸ்கானிங், CD றைட்டிங், தமிழ், ஆங்கில Computer ரைப்பிங் சேவைகளும்...

A4 Fax அனுப்புவதற்கு (உள்நாடு) பகல் - 20/=
A4 Fax அனுப்புவதற்கு (உள்நாடு) இரவு - 10/=
Fax 24 மணிநேர சேவை 021 - 222 6566 (தனி இணைப்பு)

ஞாயிற்றுக்கிழமைகளில்
உள்நாட்டு அழைப்பு 1 நிமிடம் - 5/=
வெளிநாட்டு அழைப்பு 1 நிமிடம் - 6/=
E.mail: kanapathy320@yahoo.com
மற்றும் SLT Net Card,SLT Max talk Card, SLT Passport Card -
குறித்த விலையிலும், Kit card, Mobitel Card பெற்றுக் கொள்ள

**கணபதி நெற் கொம்**

320, பலாலி வீதி (பரமேஸ்வரா சந்தி அருகில்) T.P.021-2225300
353, அரசடி வீதி (பாரதி சிலை அருகில்) நல்லூர். T.P.021&2228904, T.P.021-2228905
நல்லூர் கிளை காலை 7.30 மணி தொடக்கம் மாலை 5.30 வரை சேவை நடைபெறும்.



**வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான**
**வங்கியியல் கற்கைநெறிகள்**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

New Examinations Structure for IBSL Examinations

**DBF, CBF**

Your Path to an **Internationally** Recognized Professional Qualification in Banking & Finance

MBA Northumbria University / UK
MBA Postgraduate Institute of Management (SL) (PIM)
MBA ICFAI (India)



Diploma in Banking & Finance (DBF) / AIB
Certificate in Banking & Finance (CBF)

*Entry Requirements*

| | | |
|---|---|---|
| Any employee of a Bank / Financial Institution | G.C.E (O/L) 6 passes at one sitting with minimum 5 credits including Mathematics and a Language | G.C.E (A/L) 2 passes AND G.C.E. (O/L) 6 passes with 5 Credits Including Mathematics and a language |

In order to provide a better knowledge in Banking & Finance and to enhance the professional recognition IBSL will be launching its **New Two Tier Examination Structure** consisting of CBF and DBF levels commencing from March 2008 Examinations

IBSL will also parallely conduct the CBF / ACBF / DBF examinations under the existing structure during the year 2008.

Further Details
Director
**Jaffna College Undergraduate Dept.**
464, Hospital Road,
*(Near commercial Bank)*
Jaffna.



**இதோ உங்களுக்காக...**

FLASH
1) 1GB Kingston USB - 900/=
2) 2GB Kingston USB - 1400/=
3) 4GB Kingston USB - 2400/=

RAM KINGSTON
1) 512MB DDR II - 1600/=
2) 1GB DDR II - 2500/=
3) 256 DDR-I - 2400/=
4) 512MB DDR-I - 3750/=

TONERS
1) HP Toner 12 A - 5200/=(Original)
2) HP Toner 49 A - 5300/=(Original)
3) HP Toner 92 A - 5400/=(Original)
4) HP Toner 13 A - 5400/=(Original)
5) HP Toner 15 A - 5300/=(Original)

MOTHER BOARD
1) MSI - 5900
2) Biostar - 6400/=
3) Foxcon - 6700/=
4) Gigabyte - 7250/=
5) Intel 945 - 8600/=
6) Asus - P5GC-Max - 7500/=
7) 478 Mother Board - 7500/=

MONITORS
1) View Sonic 15" Silve Black - 12750/=(CRT)
2) View Sonic 17" Widescreen - 24750/=(LCD)
3) View Sonic 15" Widescreen - 20750/=(LCD)

Intex Keyboard - 500/=
Intex Speaker - 500/=
DVD R/W Sumsung - 4000/=

WOOFERS
1) Creatives 5.1 - 9500/=
2) Microlab 2.1 - 3700/=

HARD DISK
1) 80 GB SATA - 5250/=
2) 80 GB IDE - 5700/=

Casing White
VGA Card
T.V Card
478 Fan - 1150/=
Scanner - 6500/=
ATX Black Casing - 4500/=
Prosser Dual - Core 1.8GHz - 9200/=
Blauetooth USB - 1100/=
Card Reader USB - 1000/=
All Type of Memory Card

PRINTER
1) HP 1020 Laser Jet - 18500/=
2) HP All inone - 14000/=
3) HP 1460 - 5500/=
4) Epson IQ 300+II - 21500/=
5) Samsung ML 2010 - 15250/= (Laser Jet)

Warranty உரிய பொருள்களுக்கு 1Year முதல் 3 Years வரை Warranty வழங்கப்படும்.

**MUSIC WORLD & COMPUTERS**
141B, பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
(ஞாயிறு விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


## கண்ணீர் அஞ்சலி

31.01.2008 இல் திருநெல்வேலியில் மரணமான, எமது கல்லூரி ஆசிரியை தயாளகௌரியின் அன்புச் சகோதரன்

**பொன்னுத்துரை கிருஸ்ணகுமார்**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
அளவெட்டி அருணோதயக் கல்லூரி. (d)

## கண்ணீர் அஞ்சலி



எமது கலாமன்ற பொருளாளர் திருமதி வி.சற்குணதேவி அவர்களின் பாசமிகு சகோதரரும் கலாமன்ற கணக்காய்வாளரும் சமூக சேவையாளருமாகிய

**ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர்**

அவர்களின் திடீர் மறைவு கேட்டு மீளாத்துயரடைவதுடன், அன்னாரது குடும்பத்தினருக்கும் காரைநகர் மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடி சேர பிரார்த்திக்கின்றோம். (e)

**நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்**

# 90 அலகிற்கு மேலான மின் கட்டணத்தை 30 வீதத்தால் அதிகரிக்க அரசு தீர்மானம்

கொழும்பு,மார்ச் 15

மின்கட்டணம் 90 அலகிற்கு அதிகமாக பாவிக்கப்படும்போது அதற்கான கட்டணத்தை 30 வீதத்தால் அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான அனுமதியை அமைச்சரவை கடந்த புதன்கிழமை வழங்கியுள்ளது.

புதிய கட்டண அதிகரிப்புத் திட்டம் இன்று முதல் அமுலாகின்றது. இதன்படி - மாதாந்தம் பாவிக்கும் மின்சாரத்தின் அளவு 90 அலகுக்குள் இருக்கும் வரை கட்டணத்தில் மாற்றம் எதுவும் இருக்காது.

இதேவேளை 91 அலகு முதல் 360 அலகு வரையிலான பாவனையிலேயே மின்கட்டண மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி 91 முதல் 120 வரையிலான மின் பாவனை ஒன்றின் பொதுவான கட்டணமான 14 ரூபா 10 ரூபாவாக மாற்றப்பட்டு 10 ரூபாவுடன் 30 வீத எரிபொருள் கட்டணம் சேர்க்கப்பட்டுள்ளது.

121 முதல் 180 வரையிலான பாவனை அலகு ஒன்றின் பொதுவான கட்டணமான 14 ரூபா 11 ரூபாவாக மாற்றப்பட்டு 11 ரூபாவுடன் 30 வீத எரிபொருள் கட்டணம் சேர்க்கப்பட்டுள்ளது.

181 முதல் 240 வரையிலான பாவனை அலகு ஒன்றின் பொதுவான கட்டணமான 19 ரூபா 80 சதம், 15 ரூபாவாக மாற்றப்பட்டு 15 ரூபாவுடன் 30 வீத எரிபொருள் கட்டணம் சேர்க்கப்பட்டுள்ளது.

241 முதல் 360 வரையிலான பாவனை அலகு ஒன்றின் பொதுவான கட்டணமான 19 ரூபா 80 சதம், 16 ரூபாவாக மாற்றப்பட்டு 16 ரூபாவுடன் 30 சதவீத எரிபொருள் கட்டண அதிகரிப்புச் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறே மின் கட்டண மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பூஜ்ஜியம் முதல் 30 வரையான ஓர் அலகின் தற்போதைய விலையான 3 ரூபாவும், 31 முதல் 60 வரையான ஓர் அலகின் தற்போதைய விலையான 34ரூபாவும், 61 முதல் 90 வரையிலான ஓர் அலகின் தற்போதைய விலையான 5 ரூபாவும் இன்னும் திருத்தப்படவில்லை.

இதில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக திறைசேரிச் செயலாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று மின்சக்தி எரிபொருள் அமைச்சர் ஜோன் செனவிரட்ண நேற்று தெரிவித்தார்.

இந்த மறு சீரமைப்பு மூலம் 4 ஆயிரத்து 400 கோடி ரூபாவை இலாபமாகப் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று அமைச்சர் கூறினார்.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை குறையும் போது மின் கட்டணத்தையும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நேற்று முன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். (சி)

## இறைவரித் திணைக்களத்திற்கு புதிய ஆணையாளர் நாயகம்

கொழும்பு,மார்ச் 15

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் புதிய ஆணையாளர் நாயகமாக சஹம்பக்தி அங்கம்பன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை இந்தப் பதவியை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தராகப் பணியாற்றிய இவர் 1976 இல் அரச சேவையில் இணைந்து கொண்டவர் எனவும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

# சட்டவிரோதமான முறையில் மின் பாவிப்போர் 5 லட்சம் பேர்

## மின்சக்தி அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,மார்ச் 15

"எமது நாட்டில் சட்டவிரோதமான மின் பாவனை யாளர்கள் சுமார் ஐந்து லட்சம் பேர் இருக்கின்றனர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அமைச்சுத் திட்டமி ட்டுள்ளது.

- இவ்வாறு மின்சக்தி வள அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவருமாறு:-

திருட்டுத்தனமாக மின் இணைப்பைப் பெற்ற பாவனையாளர்களுள் பெரும்பாலானவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் பின்தங்கிய கிராமப் புறங்களிலுமே உள்ளனர். இலங்கையில் மொத்தம் 38 லட்சம் மின் பாவனையாளர்கள் உள்ளனர்.

இதில் 28 லட்சம் பாவனையாளர்கள் 90 அலகுக ளுக்குக் குறைவான மின்சாரத்தையே பாவிக்கின்றனர். 361 இற்கும் 600 இற்கும் இடைப்பட்ட அலகுகளைப் பயன்படுத்தும் 10 ஆயிரத்து 204 பாவனையாளர்கள் உள்ளனர்.

601 இற்கு மேற்பட்ட அலகுகளைப் பயன்படுத்தும் 10 ஆயிரத்து 500 பாவனையாளர்கள் இருக்கின்றனர்.

மின் உற்பத்திக்கான செலவுகள் அதிகரித்துள்ள போதிலும் அதனை ஈடுசெய்வதற்கு மின் துண்டிப்பை மேற்கொள்ள அரசு விரும்பவில்லை. மின் பாவனையைக் குறைக்கச் செய்து பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் மின் கண்டனத்தில் மாற்றத்தைக் கொண்டுவரவே அமைச்சு தீர்மானித்துள் ளது எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# ஆயுதங்களைக் கீழே வைக்கும் எந்தக் குழுவுடனும் இணைந்து போட்டியிடுவதற்கு அரசு தயார்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உறுதி

கொழும்பு, மார்ச். 15

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் மிக விரைவில் நடைபெறும். அத்தேர்தலில் புலிகள் மற்றும் ஐ.தே.க. தவிர்ந்த அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கூட்டுச் சேர அரசு தயாராக இருக்கிறது.

- இவ்வாறு விவசாய அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது-

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடவடிக்கைகளைக் கையாள்வதற்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் தலைமையில் விசேட குழுவொன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நியமித்துள்ளது. எந்தக் கட்சியுடன் கூட்டுச்சேர்வது மற்றும் யாரை வேட்பாளர்களாகத் தேர்வுசெய்வது என்பது குறித்து இக்குழு தீர்மானமெடுக்கும் என்றார்.

ஆயுதக் குழுக்கள் எதுவானாலும் தமது ஆயுதங்களைக் கீழே வைத்து ஜனநாயக வழியில் இணைந்து கொள்ள விரும்பினால் அவற்றை அரசு வரவேற்குமா - என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அமைச்சர்:

கிழக்குத் தேர்தலின்போது ஆயுதங்களுடன் சில குழுக்கள் வன்முறையில் ஈடுபட்டன என எதிர்க்கட்சி குற்றம் சாட்டியது. எனினும் கிழக்குத் தேர்தலில் அதிகமான மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பில் ஈடுபட்டதாக அங்கு செயற்பட்ட அனைத்துக் கண காணிப்புக் குழுக்களும் தெரிவித்திருந்தன. தேர்தல் தினத்தன்று அப்பகுதியில் எதுவித வன்முறைச் சம்பவங்களும் பதியப்பட்டிருக்கவில்லை. ஆயுதக்குழுக்கள் செயற்பட்டிருந்தால் வன்முறைகள் நிச்சயம் நிகழ்ந்திருக்கும்.

தேர்தல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளுக்கும் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடும் உரிமை உள்ளது.

எந்தவொரு ஆயுதக்குழுவும் தமது ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்ள முன்வருமாயின் அதனை அரசு இருகரம் கொண்டு வரவேற்கும். பயங்கரவாதத்தை இல்லாமல் செய்வதே அரசின் பிரதான குறிக்கோளாகும் - என்றார். (உ)



இலங்கையில் நீண்டகாலம் சாரணர் சேவையில் ஈடுபட்ட சாரணர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலையப் பள்ளி அதிபரும் காங்கேசன்துறை சாரணர் கிளைச் சங்கத்தின் மாவட்ட உதவி ஆணையாளருமான கனகசபை காராளசிங்கமும் கௌரவிக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா விருதினை வழங்கிக் கௌரவித்தபோது எ்டுக்கப்பட்ட படம். (86)

# தமிழ் சிங்கள புத்தாண்டுவரை எரிபொருள்விலை அதிகரிக்காது

## அமைச்சர் பௌஸி உறுதி

"உலக சந்தை யில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டிருக்கின்ற இத் தருணத்தில் எக்காரணத்தைக் கொண்டும் தேசிய சந்தையில் எரிபொருளின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது."

- இவ்வாறு பெற்றோலிய மற்றும் பெற்றோலிய வள அமைச்சர் ஏ.எச்.பௌஸி தெரிவித்தார்.

கொழும்பு - 7 இல் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அமைச்சர் பௌஸி இத்தகவல்களைத் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நுகர்வோர் அறியாதவகையில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் போன்றவற்றுக்கு மானியம் வழங்கப்படுகின்றது. 10 வீத விலைக்கழிவில் எரிவாயு பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலக சந்தையில் எரிபொருளின் விலைகள் அதிகரித்துச்செல்கின்றன. இது கட்டுப்படுத்த முடியாத ஒன்றாக இருக்கின்றது. எம்மிடம் இருக்கின்ற எரிபொருள் சேமிப்புக் குதங்களில் ஒன்றரை முதல் இரண்டு மாதங்கள் வரையான காலப்பகுதிக்குத் தேவையான எரிபொருளையே சேமித்து வைக்க முடிகின்றது.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படும்போது உள்நாட்டிலும் அதன் அதிகரிப்பு தவிர்க்க முடியாததாகும். ஆனாலும், இம்முறை தேசிய சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எரிபொருள் விநியோகத்தை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எரிபொருளின்விலையை அதிகரித்து மக்களைப் பாதிப்படையச் செய்யும் தேவை அரசிற்கு இல்லை. எனவே, எரிபொருள் சேமிப்பகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு கடந்த காலங்களிலும் பார்க்க அதிகளவு எரிபொருளை சேமித்து வைப்பதற்கான திட்டங்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

நுகர்வோரைப் பாதிக்காத அதே வேளை, பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இலாபம் பெறவேண்டும் என்பதே எமது அடிப்படை நோக்கமாகும்.

கடந்த ஜனவரி மாதம் எரிபொருளுக்கான விலைகள் அதிகரிக்கப்பட்டன. அதன் பின்னர் இதுவரை எதுவித விலை அதிகரிப்புகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த விலை அதிகரிப்பின் மூலம் மண்ணெண்ணைய் லீற்றர் 70 ரூபாவும் டீசல் லீற்றர் 80 ரூபாவும் விற்கப்படுகின்றன - என்றார். (உ)

# வத்தளையில் காணாமற்போனவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில்

கொழும்பு, மார்ச். 15

அதிரடிப்படையினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட மட்டக்களப்பு ஊறுகாமத்தைப் பிறப்பிடமாகவும், வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட இளைஞர் பற்றி விவரத்தைப் பெற முடியாது உள்ளது எனவும் இவர் பற்றிய தகவலை அறிந்து தரும்படியும் இந்த இளைஞரின் தந்தையார் பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணனிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

- இவ்வாறு அமைச்சரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

சித்திரவேல் சிவானந்தன் (வயது - 25) என்ற இளைஞரே இவ்வாறு காணாமற் போயுள்ளார். அண்மையில் சவூதி அரேபியாவுக்கு சென்ற சிவானந்தன் வேலைப்பளு காரணமாக அங்கிருந்து ஊருக்கு திரும்பினார். கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக வத்தளையில் தனியார் நிறுவனத்தில் பணிக்காக இணைந்து கொண்டார்.

சம்பவ தினமான 11.08.2008 இல் அதிரடிப்படையினர் ஐந்து பேர் இவரை ஏற்றிச் சென்றதுடன் ராஜகிரிய பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர் என கூறிச் சென்றனர்.

இவர் தொடர்பாக ராஜகிரிய பொலிஸில் விசாரித்தபோதும், அப்படி எவரும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பெற்றோர் பிரதி அமைச்சரிடம் காணாமல் போதல் மற்றும், ஆள் கடத்தல் தொடர்பான விசாரணைகளைக் கண்காணிக்கும் குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, ஆகிய அமைப்புகளிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

காணாமல் போன சிவானந்தன் தற்போது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார் என அறியப்பட்டுள்ளது. நாளை சனிக்கிழமை 15ஆம் திகதி பெற்றோர்கள் இவரைச் சந்திப்பதற்கு பிரதி அமைச்சர் ஏற்பாடு செய்துள்ளார். - எனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# மூச்சை இழுத்து விடுங்கள் 'ரென்ஷன்' போய் விடும்

★எந்த காரணமும் இல்லாமல் தலை வலி வருகிறதா...

★திடீரென கோபம் தலைக்கேறி விட்டதா...

உடனே ''ரென்ஷன்' ஆகிவிடுவோர் தான் அதிகம். ஆனால், அதைப்போக் கிக் கொள்ள சுலபமான வழி இருக்கிறது;

ஏனோ பலரும், மாத்திரையை நாடு கின்றனர்; இன்னும் சிலர், சிகரெட், மது 'நட்பை' நாடுகின்றனர்.

செலவில்லா மருத்துவம் எது தெரியுமா? மூச்சை இழுத்து விடுவதுதான்.

ரென்ஷனாக இருக்கும்போது, மூச்சை, ஆழமாக இழுத்து, வெகு நிதானமாக வெளியேவிட்டுப் பாருங்கள். இப்படி சில முறை செய்தாலே, உங்களுக்கு 'ரிலீப்' நன்றாக தெரியும். மூச்சுப்பயிற்சியால், பல பலன்கள் உள்ளன. பலருக்கும் இப் போது தான் தெரிய ஆரம்பித்துள்ளது.

இவர்களைப் பயன் படுத்தி,யோகா, மூச்சுப்பயிற்சியை வியாபாரமாக்கி வருகின்றனர் பலர். அவர்களிடம் இந்த அப்பாவி மக்கள், பணத்தை அழுது அரை குறையாகப் பயிற்சி பெற்று, அதனால் பலன் இல்லாமல் நொந்து போகின்றனர்.

எது மூச்சுப்பயிற்சி? யோகா, மூச்சுப் பயிற்சி இரண்டுமே, வெகு நிதானமாக, அலட்டிக் கொள்ளாமல், வியர்வை சிந்தாமல் செய்ய வேண்டிய பயிற்சி. எந்த பரபரப்பும் இல்லாமல், முழுமையாக அனுபவித்துச் செய்தால், அதன் பலன்கள் தெரியும். அந்தவகையில், மூச்சுப் பயிற்சியை முறையாக, அனுபவித்து செய்துவந்தால், அதன் பலன்கள் முழுமையாகக் கிடைக்கும்.

மூச்சுப்பயிற்சி என்பது, சுவாசத்தை, மேலோட்டமாக இழுத்துவெளியேற்றுவது அல்ல. மூச்சை இழுப்பதும், வெளியேற்றுவதும் மிக மிக நிதானமாகச் செய்ய வேண்டும். சிறிது கூட அவசரமாகவே, அரைகுறையாகவோ செய்யக்கூடாது.

எதற்கெடுத்தாலும் 'ரென்ஷன்' என்று செல்வது வாடிக்கையாகி விட்டது. ஆனால், உண்மையான ரென்ஷன் என்பது எது என்றே பலருக்குத் தெரியாது. அந்த உண்மையான டென்ஷனால் தான் பி.பி., எகிறுகிறது; மன அழுத்தம் அதிகரிக்கிறது; சாக்கரை நோய் வருகிறது.

எந்த ரென்ஷனாக இருந்தாலும், மூச்சுப் பயிற்சி செய்தால்தானே போய் விடும். நாம் எதுக்கெடுத்தாலும், ரென்ஷன் என்று சொல்லமாட்டோம்; ''அப்பாடா, இப்போது தான் ஓய்வாக இருக்கிறேன்' என்று சொல்வீர்கள். நம்மை அறியாமல் செய்யும் செயல்களில் சுவாசமும் ஒன்று. ஒரு நாளைக்கு 20 ஆயிரம் முறை மூச்சு இழுத்து, விடுகிறோம். எதற்காக இப்படி செய்கிறோம் தெரியுமா? நாம் மூச்சு விடாவிட்டால், நம் உடல் இயக்கம் 'பணால்'தான். மூளைக்கு தொடர்ந்து ஒட்சிசன் (பிராணவாயு) தேவை. ஒட்சிசனுடன் இரத்தம் பாய்ந்தால் தான் உடலில் எந்த உறுப்பும் செயற்படும். இல்லாவிட்டால், படுத்துவிடும். நாம் சாப்பிடும் உணவு சரிக்கவும் ஒட்சிசன் தேவைப்படுகிறது. மொத்தத்தில் ஒட்சிசன், உடலுக்குள் போகாவிட்டால் அதோ கதிதான். ஆண்களைவிட பெண்கள் அதிகம் மூச்சுவிடுவதில்லை. அதனால் தான் அவர்களுக்குப் பல பிரச்சினைகள் வருகின்றன. வேலை செய்யும் போது மூச்சைப் பிடித்துக்கொண்டு ஒரு வழியாக முடித்துவிட்டேன் என்று சிலர் கூறுவர். அப்படி மூச்சைப்பிடித்துக்கொண்டு எந்த வேலையையும் செய்யத் தேவையே இல்லை. சில சமயம், ஆழ்ந்த சிந்தனையின்போது நம்மை அறியாமல், மூச்சை இழுத்துவிடுவதை நாம் மறக்கிறோம். அப் போது, மூளை நம்மை எச்சரிக்கிறது. 'எனக்கு ஒட்சிசன் வேண்டும்' என்று, திணற வைத்து நம்மை மிரட்டியவுடன் தான் நாம் மூச்சை இழுத்து விடுகிறோம். எந்த ஒரு பயிற்சியிலும் மூச்சை இழுத்து பிடித்து செய்வது சரியல்ல. 'யோகா'விலும் அப்படித்தான். மூச்சை நிதானமாக இழுத்து, விடவேண்டும். மூச்சை இழுத்து விடுவது சரிதானா என்ற நீங்கள் குழம்பவே வேண்டாம். இதோ சில தகவல்கள்.

★மூச்சை இழுக்கும் போது, அடிவயிறு விரிய வேண்டும். இதுதான் முதல் அறி குறி.

## மூச்சு பயிற்சிக்கு சில யோசனைகள்

★ மூச்சை இழுக்கும் போதும், விடும் போதும், அடிவயிறு விரிந்து, பழைய நிலைக்குப் போக வேண்டும்.

★மிக நிதானமாகத்தான் இதை செய்ய வேண்டும். அப்போது தான், இருதயத்தில் உள்ள சுவாச தசைகளுக்கு பலன் கிடைக்கும். அத்துடன், வயிற்றுப்பகுதி, கீழ்ப்பகுதி ஆகியவை இயங்கி, தசைகளுக்கு வலுவூட்டும். ★

# போட்டியிலிருந்து ம.தி.மு.க. விலகல் தி.மு.க. கூட்டணிக்கு பா.ம.க. ஆதரவு

## மாநிலங்களவைத் தேர்தலின் வாக்குப் பதிவுக்கு வாய்ப்பு இல்லாமல் போனது

சென்னை, மார்ச்.15

மாநிலங்களவைத் தேர்தலில் (டில்லி மேல்சபை) தங்களுக்கு வாய்ப்பு வழங்காதமை மனவருத்தம் அளிப்பதாகத் தெரிவித்துள்ள பா.ம.க., மேற்படி தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.



அதேவேளைஇத் தேர்தலின் 6ஆவது உறுப்பினருக்கான போட்டியிலிருந்து ம.தி.மு.க.விலகியுள்ளது.அ.தி.மு.க. கூட்டணி சார்பாக வழங்கப்பட்ட வாய்ப்பை அது நிராகரித்துள்ளது. இதனால், 6ஆவது உறுப்பினர் தி.மு.க. கூட்டணிக்குக் கிடைப்பது உறுதியாகியுள்ளது.

மேற்கூறப்பட்ட கடைசிக் கட்டத் திருப்பங்களால் மாநிலங்களவைத் தேர்தலில் வாக்குப்பதிவு நடப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது.

தமிழகம், ஆந்திரா உட்பட 15 மாநிலங்களில் இருந்து டில்லி மேல் - சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 53 உறுப்பினர்களின் பதவிக்காலம், அடுத்த மாதத்துடன் முடிவடைகிறது. இந்த காலியிடங்களை நிரப்புவதற்காக, மார்ச் 26 ஆம் திகதி தேர்தல் நடைபெறுகிறது. தமிழகத்தில் இருந்து 6 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான வேட்பு மனுத் தாக்கல் செய்ய இன்று (சனிக்கிழமை) கடைசி நாள் ஆகும்.

இந்தத் தேர்தலில் தி.மு.க.கூட்டணி 5 இடங்களுக்கு போட்டியிடுகிறது. அக்கூட்டணி சார்பில் தி.மு.க. 2 இடங்களுக்கும், காங்கிரஸ் கட்சி 2 இடங்களுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு இடத்துக்கும் போட்டியிடுகின்றன.

### பா.ம.க. ஆதரவு

முன்னதாக, தி.மு.க.கூட்டணியில் தங்களுக்கும் ஒரு இடம் ஒதுக்குமாறு பா.ம.க. கேட்டது. ஆனால் அடுத்த முறை வாய்ப்புத் தரப்படும் என்று தி.மு.க. கூறியதால், பா.ம.க. அதிருப்தியை வெளியிட்டது.

இதனால் பா.ம.க.தனித்துப் போட்டியிடுமா? அல்லது, அ.தி.மு.க.கூட்டணியை ஆதரிக்குமா? அல்லது, தேர்தலைப் புறக்கணிக்குமா? என்று பலவிதமான கேள்விகள் எழுந்தன. இதுதொடர்பாக, கடந்த சில நாட்களாக பரபரப்பான சூழ்நிலைகள் ஏற்பட்டது.

இந்நிலையில், இந்த பரபரப்புகளுக்கு நேற்றுமுன்தினம் இரவு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. தி.மு.க. கூட்டணியை ஆதரிப்பதாக பா.ம.க.அறிவித்தது.

### ம.தி.மு.க.போட்டியிடவில்லை

அ.தி.மு.க. கூட்டணி 2 இடங்களில் போட்டியிடும் என்றும், இவற்றில் ஒரு இடம் அ.தி.மு.கவுக்கும், ஒரு இடம் ம.தி.மு.கவுக்கும் ஒதுக்கப்படுவதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவித்திருந்தார். அ.தி.மு.க. வேட்பாளரின் பெயரும் அறிவிக்கப்பட்டது.

இதில் திடீர் திருப்பமாக, இந்தத் தேர்தலில் போட்டியிடுவது இல்லை என்று முடிவு எடுக்கப்பட்டது. இதை வைகோ அறிவித்தார். (சி)

# விஷப் பாம்புகளுடன் பயமின்றி விளையாடும் 3 வயதுப் பாலகன்

'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்பதெல்லாம் பழங்கதையாகிப்போனது. தமிழகத்தின் 3 வயது சிறுவன் ஒருவனின் விடயத்தில். பாம்பை கழுத்தில் கயிறுபோல் போட்டுக்கொள்வது, அதற்கு முத்தம் கொடுப்பது என்றெல்லாம் மற்றவர்களுக்கு ஆச்சரியமூட்டி கொண்டிருக்கும் அச்சிறுவனின் பெயர் சாம்ஸ்மித் என்ற சில்வாஸ்.

இத்தனை சின்ன வயதில் பாம்புடன் பழகும் இவனுக்கு வழிகாட்டியாக இருப்பவர் இவரது தந்தை ஏ. சாம்சன்(வயது - 32). இவர் விலங்கியலில் முதுநிலை பட்டம் பெற்றவர். இதனால், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் என்று பல்வேறு உயிரினங்கள் மீதும் சாம்சனுக்கு தணியாத பாச..

இவரது சொந்த வீட்டிலேயேநாய்கள், பூனைகள், முயல்கள், புறாக்கள் விதவிதமான செடிகள், மரங்கள் என்று இயற்கையின் அம்சங்கள் குடியிருந்தன. இதனால், இயற்கை மீது இவருக்குள்ள ஆர்வம் சின்ன வயதிலேயே உருவானது. அதே ஆர்வத்துடன் அவரது ஒரே மகனும் இருப்பதில் ஆச்சரியமில்லை.

# தென்னிந்தியத் திரையுலகத்தின் உதவியுடன் அமெரிக்காவினுள் 1,000 பேர் வரை ஊடுருவல்

## அதிகமானோர் இலங்கைத் தமிழர்களாம்

சென்னை, மார்ச் 15

தென்னிந்தியத் திரையுலகத்தின் உதவியுடன் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து அமெரிக்காவினுள் ஆயிரம் பேர் வரை ஊடுருவியிருக்கின்றனர் என்று சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர். இவ்வாறு சென்றவர்களில் அதிகளவில் இலங்கைத் தமிழர்களே இடம்பெற்றிரு் கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலி ஆவணங்கள் மூலம் அமெரிக்கா செல்ல விசா கேட்டு விண்ணப்பித்திருந்த பிரபல கவர்ச்சி நடிகை புளோரா கைதாகி சிறையில் உள்ளார். புளோரா கைதானதன் பின்னர் அவரைப்போல அமெரிக்கா செல்ல விசா கேட்டு விண்ணப்பித்திருந்த 200 நடிகர், நடிகைகளின் மனுக்களை அமெரிக்கத் தூதரகம் நிராகரித்துள்ளது. அவர்கள் அனைவரும் அமெரிக்கா செல்வதற்கு நிரந்தத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

பொரும்பாலும், தெலுங்கு நடிகர் - நடிகைகள்தான் அமெரிக்காவுக்கு அதிகளவில் போலி விசா மூலம் ஆள்களை அழைத்துச் சென்றுள்ளமையால், அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் இது தொடர்பாக ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் முகாமிட்டு விசாரித்து வருகிறார்கள். விசாரணையில் ஈடுபட்டுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர் கூறியவை வருமாறு:-

''போலி விசா மூலம் நடிகர், நடிகைகள் கடந்த 10 ஆண்டுகளாக அமெரிக்காவுக்கு ஆட்களை அழைத்துச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம். நட்சத்திர இரவு கலை நிகழ்ச்சிகள் என்றும், சினிமாப் படப்பிடிப்பு என்றும் குறிப்பிட்ட சில சினிமா கலைஞர்கள் ஆள்களைப் போலி விசா மூலம் அழைத்துச் சென்றுள்ளனர். அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பி வரவில்லை என்பது தெரிய வந்துள்ளது. அவர்கள் சட்டவிரோதமாக அமெரிக்காவிலும், கனடாவிலும் தங்கியிருந்து வேலை பார்க்கலாம். சட்டவிரோதமாகத் தங்கியுள்ள அவர்களால் சட்டவிரோதச் செயல்கள் நடக்கலாம் என்று அஞ்சுகிறோம்.


''எனவேதான், அவர்களை அழைத்துச் சென்ற நடிகர், நடிகைகளின் பெயர்ப் பட்டியலை பொலிஸாரிடம் கொடுத்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுள்ளோம். 4 தென்னிந்திய மாநிலங்களில் இருந்தும் சுமார் 500 இலிருந்து 1000 பேர்வரை அமெரிக்காவுக்கு ஊடுருவியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இலங்கைத் தமிழர்கள் இதில் அதிகளவில் இருக்கலாம்.

''ஆந்திராவில் இருந்துதான் அதிகளவில் விசா கேட்டு விண்ணப்பிக்கிறார்கள். அங்குதான் அதிகளவில் மோசடி முகவர்கள் உள்ளனர். விசா மோசடியைத் தடுப்பதற்காக ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் அமெரிக்கத் தூதரக அலுவலகம் ஒன்றைப் புதிதாகத் தொடக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். தமிழகத்தைச் சேர்ந்த நடிகர், நடிகைகள் இந்தப் பிரச்சினையில் மிகவும் குறை வான எண்ணிக்கையில்தான் இடம்பெற்றுள்ளனர். - இவ்வாறு அந்த அதிகாரி கூறினார்.

# கிறிஸ்துவின் மீட்புப் பணியில் தொடர்ச்சியாகப் பங்கெடுப்போம்

கிறிஸ்துவின் முதலும் முக்கியமுமான மீட்புப்பணியில் தொடர்ச்சியாக நாமும் பங்கெடுக்க அழைக்கப்பட்டுள்ளோம். இதற்கு எமது ஆன்மீகம் கன்மலையாகிய கிறிஸ்துவின்மேல் அடித்தளமிடப்பட வேண்டும். இன்று நாம் நினைவு கூரும் புனித சூசையப்பரின் வாழ்வையும் மீட்புப் பணியில் அவரின் பங்களிப்பையும் தியானிப்பது எமது வாழ்விற்கு வழிகாட்டுவதாக அமையும்.

மீட்பராம் இயேசுவை இவ்வுலகிற்கு வெளிக்கொணரும் கருவிகளாக செயற்பட்டவர்கள் அன்னை மரியாவும் சூசையப்பரும் ஆவர். இரட்சிப்புப் பணிக்கு முதல் சம்மதத்தை முழு மனதோடு தெரிவித்த கிறிஸ்துவோடு உடன்பயணித்தனர். குறிப்பாக நீதிமானாகிய சூசையப்பர் இறைதிட்டத்தை ஆய்ந்துணர்ந்தவராக இறைவன் தன்னிடம் கேட்டவற்றை முழுமனதுடன் செய்தார். இரட்சிப்புப் பணியில் பங்கெடுத்தார். தனது வாழ்விற்கான வெகுமதியையும் பெற்றுக் கொண்டார்.




திருமுழுக்கின் மூலமாக கிறிஸ்துவோடு பாவத்திற்கு மரித்து அவரோடு அடக்கம் செய்யப்பட்ட நாம் அவரோடு உயிர்தெழுந்து பாவத்திற்கு அடிமைகளாய் இராதபடி மீட்பைப் பெற்றுள்ளளோம். நாம் பெற்றுக் கொண்ட இந்த மீட்பை இழந்து விடாமலும் மற்றவர்களையும் இந்த மீட்பின் பாதையில் வழி நடத்துவதே எமது முக்கியமான அழைப்பு ஆகும். ''கடவுளுக்கு உகந்த தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள்'' (உரோ12:1) என்பதும் மீட்டுப் பணிக்கான ஓர் அழைப்பு ஆகும். என்னை நான் முற்றுமாக அழித்து விடுவது அல்ல. உயிருள்ள பலி உயிரோடு இருந்து பலி செலுத்த வேண்டும். கிறிஸ்து பாவிகளுக்காகக் தன்னை கொடுத்தார். அதுபோல் நாமும் மற்றவர்களுக்காக குறிப்பாக அழிந்து போகும் ஆத்மாக்களுக்காக எமது ஆசைகள், விருப்பங்கள் அனைத்தையும் தகனித்து பாவிகளை மீட்க வேண்டும். தாமரை தண்ணீரில் வாழ்ந்தாலும் அது தண்ணீரோடு ஒட்டாது. அதுபோல நாமும் உலகில் வாழ்ந்தாலும் உலகத்துக்கு உத்த வேஷம் தரிக்காமல் கோதுமை மணிபோல் மடிந்த அவமான நிந்தை சிலுவைகளை அனுதினமும் சுமந்து கிறிஸ்துவின் பின்னால் செல்வோம். மீட்புப் பணியில் பங்கு கொள்ள....

Sr.டிலோசியா (தி.கு).

# யாழ். நகரப்பகுதிக்கு நவீன தீயணைப்பு இயந்திரம்; வர்த்தகர்கள் உதவினால் தார் எடுத்துவரமுடியும்



## வட மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ்.நகரப் பகுதிக்கு அதிக வினைத்திறன் கொண்ட நவீன தீயணைப்பு இயந்திரம் ஒன்றை வெகுவிரைவில் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்தகவலை வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்.மாவட்டத்தில் நல்ல வினைத்திறன் உடைய தீயணைக்கும் இயந்திரம் ஒன்று இல்லாமையால் தீவிபத்துகளின் போது முழு அளவில் செயற்பட்டு அவற்றைக் கட்டுப்படுத்த இயலாதிருப்பதாக பலர் எனது கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர். இதனையடுத்து புதிய தீயணைப்பு இயந்திரம் கொள்வனவு செய்வதற்கான மதிப்பீடு ஒன்றை யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் கோரியிருந்தேன். அந்த மதிப்பீடு இப்போது கிடைத்துள்ளது. எனவே வெகுவிரைவில் தீயணைப்பு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

யாழ.மாவட்டத்தில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ்உள்ள வீதிகளைத் திருத்துவதற்குத் தார் எடுத்து வருவதில் நெருக்கடிகள் உள்ளன. தற்போது யாழ். அரச அதிபரின் உதவியுடனே தார் எடுத்து வரப்படுகின்றது. அது எமது அபிவிருத்திப் பணிகளுக்குப் போதுமானதாக இல்லை. குடாநாட்டில் உள்ள தனியார் வர்த்தகர்கள் தாரினை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்து அரச அதிபர் நிர்ணயிக்கும் விலைக்கு வழங்கினால் உள்ளூராட்சிச் சபைகள் அதனைக் கொள்வனவு செய்ய எற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

**நிதி ஒதுக்கீட்டில் மாற்றமில்லை**

வடமாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பாக அரசு எமக்கு எந்தவிதமான அறிவித்தலையும் வழங்கவில்லை. வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு வழமை போன்றே இம்முறையும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் எந்தவிதமான குறைப்பும் இடம்பெறவில்லை.

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு 4 மிருக வைத்தியர்களை நியமிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எல்லா உள்ளூராட்சிச்சபைகளிலும் இப்போது திட்டமிடல் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் வினைத்திறன் கொண்ட திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

உள்ளூராட்சிச் சபைகளின் கீழ் உள்ள வீதிகளில் வீதிச் சமிக்ஞைகளையும் சீரமைப்புச் செய்வதற்குச் சபைகளின் செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சிச் சபைகளின் நூலகங்களில் ஆலோசனைக் குழுக்களும் அமைக்கப்படவுள்ளன.

நீதிமன்றங்களில் அறவிடப்படும் தண்டப் பணத்தையும் உரியமுறையில் பெற்று அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் திருநெல்வேலி பிரதான சந்தை இவ்வருட இறுதிக்குள் பல்வேறு வசதிகளுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. அதற்கான பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன- என்றார்.

பத்திரிகையாளர் சந்திப்பின்போது யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமாரும் பிரசன்னமாக இருந்தார். (அ-50)

## தென்மராட்சி வலய ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு வாய்ப்பாடு மனனப்போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்15

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான வாய்ப்பாடு மனனப் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளன.

பத்து நிலையங்களில் இப் போட்டிகள் நடத்தப்படுமெனவும் ஒதுக்கப்பட்ட நிலையங்களில் குறித்த நேரத்திற்கு முன்னர் மாணவர்களை அனுப்பி வைக்குமாறும் அதிபர்களுக்கு அறிவுறுத் தப்பட்டுள்ளது.

போட்டிகளில் சித்திபெறும் மாணவர்களுக்கான சான்றிதழ்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று 28 ஆம் திகதி மாணவர்களுக்கு வழங்குமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கேட்டுள்ளார். (202-207)



இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையைக் கணனி வலைப்பின்னல் சேவையுடன் இணைக்கும் விழா இம் மாத முற்பகுதியில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினரான வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் உரை நிகழ்த்துவதை முதலாவது படத்தில் காணலாம். விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை இரண்டாது படத்தில் காணலாம்.

## இடம்பெயர்ந்தோருக்கு இலவச சட்ட சேவையும் ஆவணப் பதிவும்

யாழ்ப்பாணம்,மார்ச்15

மனித நேய அமைப்புகளின் கூட்டமைப்பு நிறுவனம் இடம்பெயர்ந்து உரும்பிராய் பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கென இலவச சட்ட சேவையையும் ஆவணப் பதிவையும் நடத்தவுள்ளது.

இவற்றுக்கான முகாம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை உரும்பிராய் கிருஷ்ணன் கோயிலடியில் நடைபெறவுள்ளது.

உரும்பிராய் தெற்கு (ஜே/265), உரும்பிராய் கிழக்கு (ஜே/266) ஆகிய பிரதேசங்களில் வதியும் இடம்பெயர்ந்த மக்கள் இப்பதிவு சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அமைப்பின் மாவட்ட அலுவலர் கேட்டுள்ளார். (202)

## மணற்காட்டுப் பிரதேசத்தில் சவுக்குகள் வெட்டப்படுகின்றன

குடத்தனை,மார்ச்15

மணற்காட்டுப் பகுதியில் தொடர்ந்தும் சவுக்கு மரங்களை விறகுக்காக வெட்டி விற்பனை செய்யப்படுவதாக முறையிடப்படுகின்றது.

தினமும் சுமார் 15 சைக்கிள்களில் இந்தச் சவுக்கு மரங்களைச் சிலர் வெட்டி எடுத்துச் செல் வதைக் காணக்கூடியதாக உள்ளது என்றும்- வலிக்கண்டி மீள்குடியேற்ற வீதியினூடாகச் சென்றே இவர்கள் சவுக்கு மரங்களை வெட்டிவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.(202-78)

## ----- நிகழ்வுகள் -----

யாழ்ப்பாணம்,மார்ச் 15

மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயம் மற்றும் இடம்பெயந்து அங்கு இயங்கிவரும் மாதகல் நுணசை வித்தியாலயம் ஆகியனவற்றின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் வி.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாகச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி ஆகியோர் கலந்து கொள்வர்.

நிறுவுநர் தின உரையை மாதகல் பங்குத் தந்தை அருட்திரு ஏ.சி.கிறிஸ்தோப்பர் அடிகளார் நிகழ்த்துவார். (202-135)

* * *

அரியாலை பிரப்பங்குளம் மகா மாரியம்மன் கோயிலில் கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் தினமும் திருவிளையாடற் புராணம் படிக்கப்பட்டு வருகின்றது.

இதன் பூர்த்திவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பகல் பூசை நிறைவடைந்ததும் நடைபெறவுள்ளது. இந்நிறைவுவிழாவில் திருவிளையாடற் புராணம் படித்தவர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள். கோயில் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் நடைபெற்றுவரும் பங்குனி அபிஷேகத்தையொட்டி இந்த அபிஷேக காலத்தில் இத் திருவிளையாடற் புராணம் படிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (202)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 15

மூளாய் சுரேஸ் கல்வி வளர்சோலையின் 27 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குக் கல்வி நிலைய முன்றலில் நடைபெறவுள்ளன.

நிலைய இயக்குனர் கே.எஸ்.சின்னையா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலாளர். எஸ்.எம்.குமாரசுவாமி கலந்துகொள்வார். (202)

* * *

குடத்தனை,மார்ச் 15

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வில் நாளை ஞாயிற்றுக்கிழமை ''இறைபணி'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இந்தச் சொற்பொழிவினை சண்முகம் தேவன் நிகழ்த்தவுள்ளார். (208 - 78)

## கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஏற்பாட்டில் இவ்வாண்டிற்கான கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர்பிரிவுப் பயிற்சி நெறி கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. இந்தப் பயிற்சி நெறியில் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் மற்றும்வெளி மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர். (202-224)




## கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

### ஆலோசனைகளையும் முன்வைக்கின்றது நல்லொழுக்க சம்மேளனம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

குடாநாட்டில் கசிப்பு உற்பத்தியை இல்லாதொழிக்க உடன் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் யாழ்.அரச அதிபர் கே.கணேசிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

கசிப்பு உற்பத்தியைத் தடை செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளையும் சம்மேளனம் மகஜரில் தெரிவித்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது :

எமது சம்மேளனம் புகைத்தல், மதுவிலக்கல் மற்றும் சமாதானம், சகோதரத்துவம் என்ற கோட்பாட்டுக்கு அமைவாக வட பிரதேசத்தில் செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் சம்மேளனம் கிராமங்கள் தோறும் பாடசாலைகளிலும் மற்றும் வைத்தியசாலைகளிலும் இது தொடர்பான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது.

எனவே நாம் எத்தனை முயற்சிகள் எடுத்தாலும் சில கிராம மக்கள் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றார்கள். இவர்களுக்கு நீதிமன்றங்கள் மூலம் லட்சக்கணக்கில் தண்டம் அறவிட்டாலும் திரும்பவும் தண்டப்பணத்தை ஈடு செய்வதற்காகக் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுகின்றார்கள்.

ஆகவே கசிப்பு உற்பத்தியை நிறுத்துவதற்கு எமது சம்மேளனம் சில ஆலோசனைகளை முன்வைக்க விரும்புகின்றது.

* கசிப்பு உற்பத்திக்கு முக்கிய பாவனைப் பொருளாகப் பாவிப்பது ஈஸ்ராகும். இப் பொருள் குடாநாட்டுக்குக் கப்பல் மூலம் தான் இறக்குமதி செய்யப்படுகின்றது. எனவே ஈஸ்ரை இறக்குமதி செய்து பேக்கரிகள் உள்ள ப.நோ.கூ.சங்கங்களுக்கும் மற்றும் பேக்கரிச் சங்கங்களுக்கும் மட்டுமே விநியோகிக்க வேண்டும்.

எக்காரணம் கொண்டும் தனியார் கடைகளில் விற்பதைத் தடைசெய்ய வேண்டும்.

* கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு நீதிமன்றத்தால் தண்டம் அறவிட்டவர்களுக்குக் கண்டிப்பாக நிவாரணம் மற்றும் அரச உதவிகள் கிடைப்பதைத் தடைசெய்யவேண்டும்.

எனவே இந்த இரண்டு விடயங்களையும் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (202)

## பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய உற்சவம் திங்கட்கிழமை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 15

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயப் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம், 31 ஆம் திகதிகளிலும் அடுத்தமாதம் 7 ஆம் திகதியும் வரும் திங்கட்கிழமைகளில் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை பொங்கல் உற்சவம் இடம்பெறும்.

பொங்கல் உற்சவத்தையிட்டு விசேட போக்குவரத்துச் சேவைகளை இலங்கைப் போக்குவரத்துச்சபையின்யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய சாலைகளும், தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கமும் நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 15

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 வகுப்புக்களில் ஆரம்ப விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

செயலமர்வினை வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர், விஞ்ஞானபாட ஆசிரிய ஆலோசகர்கள், ஆரம்ப கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் நடத்துவர் என வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரி வித்தார். (202-207)


## திருமணக்கார் A/C வாடகைக்கு



★ டொல்பின் வான் மினிபஸ்களும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: ரட்ணம் 0777-903090
சோமசுந்தரம் பாலர் பாடசாலை, 021-222-7839
22, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (72028)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**தங்கரெத்தினம் பாலசிங்கம்**

மண்ணில்:29.05.1937

விண்ணில்:14.02.2008

நாமெல்லாம் கற்றுயர அரும்பாடுபட்டீர்
எப்போதும் எங்களது சிந்தனையே கொண்டீர்
எப்போதும் உமை மறவோம் எதுவரினும் தளரோம்
எம்மோடு இருக்கின்றீர் என உணருகின்றோம்.

கடந்த 14.02.2008 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத் தின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரிலும் தொலை பேசி, தபால், தந்திமூலம் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பா.சிவராசா,
40/1, புதுவீதி, கோய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (72021)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி ஜெகசோதி மதியழகன்**
அவர்களின் அன்புத் தந்தை

**இளையவன் வல்லிபுரம்**

அவர்கள் 11.03.2008 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,
யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க.**

(72036)

## இல்ல மெய்வன்மை போட்டி

வல்வை அ.மி.த.க.பாடசாலை, வல்வை றோ.க.த. க.பாடசாலை ஆகியன இணைந்து நடத்தும் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

வல்வை அ.மி.த.க. அதிபர் பூ.சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா.இரகுநாதன் கலந்து கொள்வார். (202)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச்சங்க அங்கத்தவர்
**காசிப்பிள்ளை சத்தியசீலன்**
அவர்களின் பாசமிகு தந்தை

**நாகலிங்கம் காசிப்பிள்ளை**

**13.03.2008 அன்று இறைபதமெய்தியமையால் துயருற்றிருக்கும்அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,*
பாதுகாப்புப் பகுதி, யாழ்.பல்கலைக்கழகம்.

(72027)




விசேடமாக முகாமைத்துவதுறையில் பணிபுரிவோருக்காக வடிவமைக்கப்பட்ட கற்கைநெறி

## Diploma in Contemporary Business Management

| | |
|---|---|
| Starts on | 19th April 2008 |
| Duration | 30 Weeks |
| Time table | Sat & Sun (10.00 – 12.00) |
| Course Objective | The course aims to introduce management concepts and techniques to practicing managers so as to improve their practice and to achieve excellence in their pursuits. |
| Course Contents | • Management and Organizational Behavior<br>• Human Resources Management<br>• Marketing Management<br>• Financial Management<br>• ICT for Managers<br>• Business Communication |



IIS CITY CAMPUS
No.200, Sivan Pannai Road, Jaffna.
Tel : 021-2228060


# மரண அறிவித்தல்



ஐயனார் வீதி, கல்வயல்,
சாவகச்சேரி. 0602217455

## திருமதி குமாரசாமி பூபதி

ஐயனார் வீதி, கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பூபதி (12.03.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகளும் வேதவனம்- தங்கம்மாவின் அன்பு மருமகளும் குமாரசாமியின் அன்பு மனைவியும் இளங்கோ (சேவாலங்கா பணிப்பாளர், வடமாகாணம்), மகேந்திரன் (GAGDO -பணிப்பாளர்- வவுனியா), சிவஞானசுந்தரம் (றூபா பன்முகவர்த்தகம் -யாழ்.), கணேசமூர்த்தி, பஞ்சகல்யாணி, நித்தியா (USA), மங்களகல்யாணி (ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும் நிர்மலா, கமலவேணி, மோகனலதா, சசிமுகுந்தன் (USA) ஆகியோரின் அன்பு மாமியும் அர்ஜீனா, அகல்யா, கஸ்தூரி, சுமன், சஜென், மாதுரி, பிரணவன், காயத்திரி, அர்ச்சனா, அஜெய்கண்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.03.2008) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 9.30 மணிக்கு கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(72037)

# மட்டக்களப்பு உள்ளூராட்சித் தேர்தல் வெறும் கேலிக்கூத்து

# மக்கள் பலவந்தப்படுத்தி வாக்களிக்கக் கூட்டிச் செல்லப்பட்டனர்

## சாடுகின்றார் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஜெயானந்த மூர்த்தி



மட்டக்களப்பில் நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது உண்மையில் ஒரு கேலிக் கூத்தான தேர்தலாகும். அங்கு ஜனநாயக ரீதியாகத் தேர்தல் நடத்தப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுபபினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி இவ்வாறு சாடியுள்ளார்.

ஆஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு கடந்த வியாழக்கிழமை அவர வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுமக்களுக்கு அப்பாற்பட்ட, பொது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத தேர்தலாகத்தான் இது அமைந்திருந்தது. 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட வாக்குகள் பதிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டாலும் அங்கு மக்கள் பலவந்தப்படுத்தப்பட்டு- அச்சுறுத்தப்பட்டு - வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதற்கு பல சான்றுகள் எம்மிடம் இருக்கின்றன.

வாக்காளர் அட்டைகளைக்கூட அந்த ஆயுதக்குழு சிலரிடம் பணம்கொடுத்து வாங்கியிருக்கின்றது. அச்சுறுத்தி பறித்துச் சென்றுள்ளனர். இபபடித்தான் இந்த வாக்களிப்பு நடைபெற்றிருக்கின்றது.

மக்கள் தாங்களாக விரும்பி வாக்களித்தனர் என்று சொன்னால் அது மிகக்குறைந்த, உண்மையில் பத்து விழுக்காட்டுக்கும் குறைவான மக்களே அவ்வாறு வாக்களித்திருக்கலாம்.

வேட்பாளர்களின் உற்றார், உறவினர்கள், அய லவர்கள் என்று வாக்களித்திருக்கலாம். ஏனைய மக்கள் விரும்பி வாக்களிக்கவில்லை.

எனினும் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட செயறபாட்டினாலும் படைகளைப் பயன்படுத்தியும், அங்குள்ள ஆயுதக்குழுக்களின் அதிகாரங்களைப் பயன்படுத்தியும், ஆயுதக் குழுக்களின் அடியாள்களைப் பயன்படுத்தியும் வாக்களித்துவிட்டு அங்கு ஜனநாயகமான தேர்தல் நடந்துள்ளது. அந்தத் தேர் தலை மக்கள் அங்கீகரித்துள்ளனர் என்று கூறுகின்றனர்.

மட்டக்களப்பு மாநகர சபையில் சிறிலங்கா சுதந்திரக் கூட்டமைப்புடன் ஆயுதக் குழு இணைந்து போட்டியிட்டு மாநகர சபையைக் கைப்பற்றியிருக்கின்றது. எனவே அரசின் கொள்கையை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றெல்லாம் பொய்ப்பிரச்சாரம் செய்கின்றனர். ஆனால் உண்மையில் மக்கள் அங்கு ஆயுதக்குழு வையோ அரசையோ ஏற்றுக்கொள்ளவில்லை.

சந்தர்ப்ப சூழ்நிலையாக இந்தவாக்களிப்பு நடைபெற்றது. இதன் காரணமாகத்தான் அங்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆகவே சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளிடம் இருந்து கிழக்கை கைப்பற்றியிருக்கின்றோம், அங்கு ஜனநாயகமான தேர்தலை நடத்தியிருக்கின்றோம், மக்கள் ஜனநாயக ரீதியில் வாழ விரும்புகின்றனர் என்று கூறினாலும் உண்மைநிலை அதுவல்ல. உண்மை நிலை அங்கு மறுபுறமாகவே - எதிர் எதிராகவே உள்ளது:

மக்கள் நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர், அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர், வாய் திறப்பதற்கு அச்சப்படுகின்றனர், இராணுவ அடக்குமுறைக்குள் வாழ்கின்றனர், இராணுவக் கெடுபிடிக்குள் வாழ்கின்றனர்.

### மக்களுக்கு அதிகாரம் என்பது கபடத்தனமான பிரசாரம்

அங்கு ஆயுதமுனையில் ஒரு தேர்தல் நடத்தப்பட்டிருக்கின்றது. ஒரு ஆயுதக்குழுவிடம கிராமங்களின் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஜனநாயக முறையிலான ஒரு அரசு ஆயுதக்குழுவுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு, ஆயுதக்குழுவைப் பயன்படுத்தி மக்களுக்கு அதிகாரங்களைக் கொடுக்கிறோம் என்று கூறுவதானது ஒரு கபடத்தனமான பொய்ப்பிரசாரம் ஆகும்.

மக்களை இப்படி ஏமாற்றுகின்ற காரியத்தை ஒருபுறத்தே செய்துகொண்டு மறுபுறத்தே அனைத்துலக சமூகத்தையும் சிறிலங்கா அரசாங்கம் ஏமாற்றுகின்றது.

அனைத்துலக சமூகமும் சிறிலங்கா அரசாங்கத்தின் இந்த பொய்ப்பிரசாரத்தை முட்டாள்த்தனமாக ஏற்றுக்கொள்கின்றதா அல்லது சிறிலங்காவின் நடவடிக்கைகளை அறிந்து கொள்கின்றதா என்பதனை நாங்கள் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

தேர்தலின் உண்மையான பிரதிபலிப்பு வெளிப்பட்டுவிட்டது. அனைத்துலகத் தூதுவர்களை அழைத்து வெளிவிவகார அமைச்சர் ரோகித போகல்லாகம நிதி உதவியைக் கோரியிருக்கின்றார்.

போரில் தற்போது வடக்கில் சிறிலங்காப் படையினர் பாரிய பின்னடைவுகளைக் கண்டு வருகின்றனர், இழப்புகளைச் சந்தித்து வருகின்றனர். போதியளவு இராணுவத் தளபாடங்களையும் அங்கு அவர்களால் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. உச்சநிலையில் அங்கு சமர் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஆகவே தொடர்ந்து இந்தப் போரை முன்னெடுத்துக்கொண்டு செல்லவேண்டுமானனால் நிதி தேவை. இப்போது சிறிலங்காவின் கஜானாவில் வங்குரோத்து ஏற்பட்டுவிட்டது.

எனவே அனைத்துலக நாடுகளிடம் கிழக்கின் அபிவிருத்திக்கான நிதியைப் பெற்று போருக்காகப் பயன்படுத்தப் போகின்றது. அதனை அனைத்துலகம்தான் இனிமேல் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

### போரைத் தொடர்வதற்கு இந்தியா அங்கீகாரமம்

தொடர்ச்சியாக சிறிலங்காவிற்கு இந்தியா உதவிகளைச் செய்து வருகின்றது என்பது தான் உண்மை.

உச்சகட்ட மனித உரிமை மீறல்களைச் செய்து கொண்டிருக்கும் சிறி[illegible]வின் இராணுவத் தளபதி சரத் பொன்[illegible] அண்மையில் அங்கு அழைக்கப்பட்டு அ[illegible]ருக்கு இராஜ மரியாதை எல்லாம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிரான போரை

## ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான நிலைப்பாட்டில் அனைத்துலகம்; ஆனால் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுகிறது இந்தியா

தொடர்ந்து மேற்கொள்வதற்கு இதன் மூலம் இந்திய மத்திய அரசு அங்கீகாரம் கொடுத்திருக்கின்றது. அதனைத்த்தான் நாங்கள் இன்று எதிர்த்து நிற்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு எதிரான போரை தொடர்ந்தும் இந்தியா மேற்கொள்ளுமானால் தமிழ் மக்களுக்கு இந்தியா மிகவும் மோசமானதொரு நிலையையே செய்யும்.

இருந்தாலும் இந்த நிலையிலும் இந்தியா எமக்கு பக்கபலமாக - உறவாக - இருக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் கருதுகின்றனர். ஆனால் இந்தியா மிகவும் மோசமான நிலைப்பாட்டையே எடுத்து வருகின்றது.

விடுதலைப் புலிகள் வெற்றிபெற்றுவிடக் கூடாது. இங்கு தனிநாடு ஒன்று அமைந்து விடக்கூடாது. அவ்வாறு நடந்தால் அது தனது பிராந்தியத்திற்கு ஒரு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்ற ஒரு கருத்து இந்தியா வுக்கு இருந்துவருகிறது.

இதனால் விடுதலைப் புலிகளை நசுக்கி, போராட்டத்தை நசுக்கி தமிழ் மக்களை தனது கைக்குள் வைத்துக்கொள்ள வேண்டும என்பதற்காகவே சிறிலங்காவிற்கு அது உதவி செய்து வருகின்றது.

எங்களின் போராட்டம் எதிர்காலத்தில் வெற்றியடையும்போது இந்தியா மறு தலையாகவும் நடக்கலாம். அதாவது எங்களுக்கு அங கீகாரத்தை வழங்குவதற்கு, எங்களுக்கான பங்களிப்புகளை வழங்குவதற்குக் கூட முன்வரலாம்.

ஆனால் தற்போதைய நிலைமையில் உள்ள சூழ்நிலைகளைத்தான் நாங்கள் ஆராய வேண்டியுள்ளது.

ஆகவே இந்தியாவினுடைய நிலைப்பாட்டில் மாற்றம் ஏற் பட வேண்டும். இந்தியா மாறவேண் டும். தமிழ மக்கள் தமது உரிமைக ளைப் பெற்றுக் கொள்வதற்கு இந்தியா உதவி செய்யா விடாலும் அவர்கள் எங்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கைகளையும் செய்யாமல் இருப்பதுதான் நல்லது.

### வன்னியில் பொருளாதாரத் தடை

வன்னிப் பிரதேசத்தில் இன்று மக்கள் பாரிய உணவுப் பிரச்சினை, மருந்துப் பிரச்சினை, எரிபொருள் பிரச்சினைகளை எதிர் கொண்டிருக்க அடிப்படை வசிதிகள் குறைந்த நிலையிலும் பாடப்புத்தகங்கள் இன்றியும் மாணவர்களும் பல பிரச்சினைகளை எதிர கொண்டிருக்கின்றனர்.

கொழும்பில் இருந்து வன்னிக்கு அனுப் பபட்ட மிகக்குறைவான பொருள்கள் வவுனியாவில் தேங்கிக் கிடக்கின்றன.

ஒரு குறிப்பிட்ட தொகை உணவுப்பொருள்களும், மருந்துப் பொருட்களும் அங்கு தேங்கிக் கிடக்கின்றன. தேங்கிக் கிடப்பவை வன்னிப் பிரதேசத் திற்கான முற்று முழுதான தேவையும் நிறை வேற்றக் கூடியதல்ல.

இத்தகைய பல்வேறு பிரச்சினைக்குள் இன்று வன்னிப்பிரதேச மக்கள் உள்ளனர். பொருளாதாரத் தடை என அறிவிக்கப்படா விடினும் அங்கு பாரியதொரு பொருளாதாரத் தடையுடனேயே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய பொருளாதாரத் தடைக்கு மத்தியிலும் அந்த மக்கள் ஒரு துணிவுடனும், நம்பிக்கையுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மேலும் வன்னியில் பொது அமைப்புகள் செயற்பட முடியாதளவுக்கு சிறிலங்கா அரசு தடைகளை விதித்திருக்கிறது.

இருந்தாலும் தங்களின் தேசம் மிக விரைவில் விடிவு பெறும் என்ற அதன் காரணமாகவும் மக்கள் ஒருவித அச்சத்துடன் உள்ளனர். - என்றார்.



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா வின் பாரியார் வெற்றி வீராங்கனை யான செல்வி நிருசா செல்வநாயகத்திற்கு வெற்றிக் கிண்ணம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (218)



அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் பாடசாலை அதிபர் வீ.ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாடசாலையின் முன்னாள் ஆசிரியை செல்வி சுப்பையா மனோன்மணி வெற்றிபெற்ற இல்லத்தின் தலைவரிடம் வெற்றிக் கேடயத்தைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (202)






சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினரான கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திர வடிவேல் மற்றும் விருந்தினர்களும், பாடசாலை அதிபர் தி.சோமசேகரமும் மாணவர்களின் அணிநடை மரியாதையை ஏற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

(படம்: நீர்வேலிச் செய்தியாளர்)



கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வியின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினரான யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கொடியேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் அதிபர் த.கந்தையா, பிரதி அதிபர் திருமதி செ.ஜெகநாதன், ஆசிரியர் க.ஸ்ரீரங்கன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 15

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள தேசிய இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்ப திகதி எதிர் வரும் 26ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச போட்டியாளர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு பிரதேசசெயலர்செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். இப்போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இன்று (மார்ச் 15) என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(202-207)

**Internet சேவை**
Internet Browsing சேவையைப் பெற்றுக் கொள்ள
**திருமுருகன் கொம்நெற்**
259, K.K.S. Road, Jaffna.
46, Adiyapatham Road, Thirunelvely

**காணி விற்பனைக்கு**
மல்லாகத்தில் கே.கே.எஸ்.வீதியில் இரண்டரைப் பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: சே.ஆனந்தசபாபதி
கட்டுறவாளர் வீதி, அளவெட்டி.
தொ.பே.0777242198, 021 222 3147.
(72002)

## சட்டவிரோதமாக மணல் அகழ்வு வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அதிகரித்துள்ளது

குடத்தனை,மார்ச்15

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் தொடர்ந்தும் மணல் சட்டவிரோதமாக ஏற்றப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

உழவு இயந்திரங்கள், ஹண்டர்கள் மூலமே இந்த மணல் களவாடப்படுவதைக் காண கூடியதாகவுள்ளது.

ஹண்டரிலோ அல்லது உழவு இயந்திரத்திலோ சென்று மணல் ஏற்றி விட்டு சடுதியாக ஓடிச்செல்வதாவும்-

சுமார் ஆறு அல்லது ஏழுபேர் வரை இச்செயலில் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாகவும் பிரதேச மக்கள் முறையிடுகின்றனர்.

(202-78)

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

*Diploma in Hardware Engineering*
Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

*Diploma in Video Editing*
முன்னணி Video Mixing Software களூடாக
Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

*Diploma in Graphic Designing*
Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

*Diploma in Computerized Accounting*
ACCPAC + QuickBooks + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee : 3500/=

வகுப்புக்கள் ஆரம்பம் :17/03/2008 09.00AM

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

15 . 03 . 2008



சுவிஸ்லாந்தில் வசிக்கும் சுரேந்திரன்- சாந்தகுமாரி தம்பதியின் செல்வப்புதல்வன் **ஜதுர்ஷன்** தனது முதலாவது பிறந்தநாளை 2008.03.15 இன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தாமார், அப்பப்பா, அம்மம்மாமார், மாமாமார் அத்தைமார், சித்தப்பாமார், பெரியப்பா, பெரியம்மா, மச்சாள்மார் மற்றும் உறவினர்கள், சுவிஸில் வசிக்கும் தாத்தா, சித்தப்பா, அத்தை அனைவரும் இறைவன் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றனர்.



தகவல்:
அப்பப்பா
மு.மார்க்கண்டன்,
அப்பம்மா
ம.பூரணம்.
இமையாணன்,
உடுப்பிட்டி.
(71775)

## ஜதுர்ஷன்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி


| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 10 . 07 . 1936 |  | 15 . 03 . 2005 |

**அமரர் இளையவி கிருஷ்ணபிள்ளை**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
பாரினிலேதான் விளங்கி எமையெல்லாம் ஆளாக்கி
பரமனடி சேர்ந்துவிட்ட எம்தெய்வமே!
எம்மூச்சு இருக்கும் வரை உம் நினைவு எங்களுடன்...

குளமங்கால், மல்லாகம். (71957) **குடும்பத்தினர்.**

## 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்- 15.03.2008

| அன்னை மடியில் | | அரக்கன் பிடியில் |
|---|---|---|
| 15 . 07 . 1976 |  | 31 . 01 . 2008 |

**அமரர் பொன்னுத்துரை கிருஸ்ணகுமார்**

(வருமான பரிசோதகர், நல்லூர் பிரதேச சபை)

31.01.2008 அன்று திருநெல்வேலியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் அகப்பட்டு உயிருக்குப் போராடியவேளை எமது குடும்ப குலவிளக்கினை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற மனிதநேயமிக்க உள்ளங்களுக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் அவரது உடலை அன்றையதினமே விரைவாகப் பெறுவதற்கு ஆவனசெய்த வைத்திய அதிகாரிக்கும், வைத்தியசாலை அலுவலர்கள், ஊழியர்களுக்கும், இச்சம்பவத்தினை கேள்வியுற்று உடனடியாக வருகைதந்து ஆறுதல் வார்த்தைகள் கூறியவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, பத்திரிகை, கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வாயிலாக அனுதாபச் செய்தியினை வெளியிட்டவர்களுக்கும், இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (15.03.2008) சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

கணக்கர் வளவு,
நீதிமன்ற வீதி,
மல்லாகம். (71978) **குடும்பத்தினர்.**

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 06 . 11 . 1952 |  | 31 . 01 . 2008 |

**அமரர் சங்கரப்பிள்ளை முத்துக்குமாரு**

(வருமான மேற்பார்வையாளர், நல்லூர் பிரதேச சபை)

அன்பான அப்பாவே! ஆருயிர்த் தெய்வமே! -என்றும்
அணையா ஒளியாய் எம் இதயத்தில் வாழ்கின்றீர்கள்
துயரில்லா எம் வாழ்விற்குத் துணையாகி நின்றீர்கள்- எம்
உயர்வுக்காய் நாளும் மெழுகாகிப் போனீர்கள்
பூசும் வெண்ணீறான் பூமலர்ப் பாதத்தில்
வாசம் செய்யும் வரம் பெற்றுக்- கண் கூசும்
இறையொளியருளில் உங்கள் ஆத்மா சாந்திபெற
நெஞ்சம் நெகிழ்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 31.01.2008 அன்று எம்மைவிட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளின்போது நேரில் கலந்து கொண்டவர்கள் தொலைபேசி, கண்ணீர் அஞ்சலிகள், பத்திரிகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அலுவலர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (15.03.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

V.T.S.வீதி,
உரும்பிராய் தெற்கு. (72009) **குடும்பத்தினர்.**

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இருண்ட யுகத்தை நோக்கி இலங்கையின் ஊடக சுதந்திரம்

உலகில் ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் மிக மோசமான நாடு என்று சர்வதேச ரீதியில் அடையாளப்படுத்தப்பட்டு, கீர்த்தியும் மகிமையும் பெற்றிருக்கின்றது இலங்கை.

அதிலும், தமிழ் ஊடகவியலாளர்களும், தமிழ்ப் பிரதேசங்களில் இயங்கும் ஊடகங்களுமே அதிகளவில் - மோசமான - ஆபத்துக்களை எதிர்கொள்ளும் தரப்புகள் என இதுவரை அடையாளம் காணப்பட்டிருந்தன.

இப்போது நிலைமை மெல்ல மெல்ல தென்னிலங்கையையும் விழுங்கி, கபளீகரம் பண்ணத் தொடங்கியிருக்கின்றது போலும்.

தெற்கிலும் ஊடகங்களுக்கு எதிரான கொடூர வன்முறையும், அத்துமீறல் அட்டகாசங்களும் தீவிரமாகத் தொடங்கியுள்ளன.

எண்பதுகளின் கடைசியில் இலங்கைத் தீவை - குறிப்பாகத் தென்னிலங்கையை - பற்றிப் பீடித்துப் பேரழிவை ஏற்படுத்திய 'இருண்ட யுகம்' மீண்டும் முழு நாட்டையுமே கவ்வத் தொடங்கிவிட்டது என்பது தெளிவாகி வருகின்றது.

அரச ஊடகம் ஒன்றுக்குள்ளேயே - 'ரூபவாஹினி' கூட்டுத்தாபனத்துக்குள்ளேயே - புகுந்து வெறியாட்டம் நடத்திய குண்டர் குழுவினரும் அந்தக் குண்டர் குழுவை வழி நடத்திய அரசியல்வாதியும் - சட்டம் செயலிழந்து வாளாவிருக்க - தம்பாட்டில் இராஜபோக வாழ்க்கையைத் தொடர்கின்றார்கள்.

அந்த அராஜகத்தைத் 'தட்டி'க் கேட்ட குற்றத்துக்காக 'ரூபவாஹினி' ஊழியர்களின் வாழ்வே கேள்விக்குள்ளும் அச்சத்துக்குள்ளும் மூழ்கிவிட்டது.

ஊடகத்துறையினருக்கு இங்கு நேரும் பேரவலங்களைப் பார்க்கும்போது இந்த நாட்டில் நடப்பது காட்டு தர்பார் என்ற உறுதி நமக்கு ஏற்படுகின்றது.

ரிச்சர்ட் டி சொய்ஸா போன்ற ஊடகவியலாளர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டு, அவர்களின் சடலங்கள் கடற்கரைகளிலும் வீதி ஓரங்களிலும் ஒதுங்கிய பழைய 'இருண்டயுக' காலத்தில் எதிர்க்கட்சியிலிருந்தவாறு அடிப்படை மனித உரிமைகளுக்காக முன்னின்று குரல் எழுப்பிய மஹிந்த ராஜபக்ஷவே இன்று ஆட்சிக் கட்டில். நிறைவேற்று அதிகாரமும், பாதுகாப்பு அமைச்சும் இப்போது அவரது கைகளில்தான். அத்தலைவரின் ஆட்சியில்தான் அடிப்படை உரிமைகளை மிதித்து, ஊடக சுதந்திரத்தை நசுக்கி, கருத்து வெளியிடும் உரிமையை நாசூக்காக மறைக்கும் முழு எத்தனங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி அதிகாரத்துக்கு வந்தமையை அடுத்து பல ஊடகவியலாளர்களும் ஊடகப் பணியாளர்களும் கொல்லப்பட்டார்கள்; ஊடகங்கள் தாக்கப்பட்டன; பல ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டனர்; பலர் தாக்குதலுக்கு இலக்காயினர் அல்லது கொடூரமாக அச்சுறுத்தப்பட்டனர்; சில ஊடகங்கள் பலத்த அரசியல் அழுத்தத்தின் காரணமாக மூடப்பட்டன. அச்சுறுத்தலுக்கு அஞ்சிப் பல ஊடகவியலாளர்கள் நாட்டைவிட்டு ஓடினர் அல்லது தலைமறைவாகினர்.

நாட்டின் ஜனாதிபதிக்கே தெரியாமல் ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறை விதிகள் அடங்கிய தணிக்கை முறைமை சத்தம் சந்தடியின்றி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அதிசயமும் இங்கேதான் நடந்தது.

ஊடகவியலாளர்களைப் பழிவாங்க வகைசெய்யக்கூடிய குற்றவியல் அவதூறுச் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் -

யுத்தம் தொடர்பான செய்திகள் மற்றும் தகவல்களை ஊடகங்கள் வெளியிடுவதைத் தடை செய்ய வேண்டும் என்றும் -

அதிகாரத்தில் இருப்போர் ஆதிக்கத் திமிருடன் பகிரங்கமாகக் கருத்து வெளியிடும் அவலமும் இந்த ஆட்சியில்தான் இடம்பெறுகின்றது.

பட்டப்பகலில், பலர் பார்த்திருக்க, பல புகைப்படக் கருவிகளும் வீடியோ உபகரணங்களும் நடந்தவற்றை அப்படியே பதிவுசெய்ய, அரச ஊடகம் ஒன்றுக்குள் புகுந்து அதிகார வர்க்கப் பிரதிநிதி புரிந்த அராஜகம் குறித்து உரிய - ஒழுங்கான - உறுதியான - நடவடிக்கை எடுப்பதற்குத் திராணியற்ற இந்த ஆட்சி அதிகாரம், அந்த அரச ஊடக ஊழியர்களுக்குத் தகுந்த பாதுகாப்புத் தரப்படும் என்று பாதுகாப்புத்துறையின் அதி உயர் அதிகாரி முன்னிலையில் வழங்கிய உறுதிமொழியை அடுத்த 24 மணி நேரத்துக்குள் காற்றில் பறக்கவிட்டு, தனது 'புத்தி'யைக் காட்டிவிட்டது.

அடிப்படை மனித உரிமைகளை மதிக்காமல் மோசமாக மீறும் ஓர் ஆட்சி அதிகாரம் இலங்கையில் நிலைகொண்டிருப்பது குறித்து சர்வதேச மட்டத்தில் பல்வேறு தரப்புகளாலும் குற்றச்சாட்டும், விசனமும், கண்டனமும் தெரிவிக்கப்பட்டு வருகையில், அதை மேலும் உறுதிப்படுத்துவது போன்று, 'ரூபவாஹினி' ஊடகப் பணியாளர்கள் மீதான தொடர் தாக்குதல்கள் இப்போது இடம்பெற்றிருக்கின்றன.

தன்னுடைய ஆட்சி அதிகார அலகுகளின் அராஜகங்களைக் கட்டுப்படுத்த வக்கில்லாத நிலையில் இந்த ஆட்சித் தலைமை உள்ளது என்பதையே இந்தக் கொடூரங்கள் அம்பலப்படுத்தி நிற்கின்றன.

# இலங்கையின் மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து ஜெனிவாக் கூட்டத் தொடரில் பலதரப்புகளும் கவலை!

ஜெனிவா மார்ச் 15

இலங்கையில் பலவந்தமாக காணாமற்போகச் செய்தல், சித்திரவதை போன்ற மனித உரிமை மீறல்கள் தொடருவது குறித்து ஆஸ்திரேலியா, சுவிட்ஸர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகளும் பல அரச சார்பற்ற அமைப்புகளும் தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் கவலை வெளியிட்டுள்ளன.

பலவந்தமாகக் காணாமற் போகச் செய்தல், சித்திரவதை மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியன குறித்து மனித உரிமை கவுன்ஸிலில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இந்த நாடுகள் இக்கவலையை வெளியிட்டுள்ளன.

காணாமல் போதலுக்குக் காரணமானவர்கள் உடனடியாக நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

2006 இல் மீண்டும் மோதல் ஆரம்பமானதைத் தொடர்ந்து ஊடகங்கள் மீதான அச்சுறுத்தலும், ஊடக சுதந்திரமும் மிகவும் முக்கியமான விடயங்களாக மாறியுள்ளன என ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலில் உரையாற்றிய சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி அனிட்டா கோ தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபை இது குறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர் பத்துக்கும் மேற்பட்ட ஊடகப் பணியாளர்கள் சட்ட விரோதமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இலக்கு வைக்கப்பட்டுள்ள அநேகமான ஊடகவியலாளர்கள் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 2006 இலிருந்து அரச அதிகாரிகளும், அரச சார்பு தமிழ் ஆயுதக்குழுவினரும் பத்திரிகையாளர்களை இலக்கு வைத்திருக்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை அலுவலகங்கள் மூடப்பட்டமை, செய்தித் தணிக்கை, மிரட்டல் போன்றவை இலங்கையில் ஊடக சுதந்திரத்திற்கான கடும் அச்சுறுத்தல்களாக உள்ளன.

படுகொலைகள் குறித்த விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை எனத் தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி, பலவந்தமாகக் காணாமற் போகச் செய்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயலணிக் குழு விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்க வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் பலவந்தமாகக் காணாமற் போதல் பரந்துபட்ட அளவில் இடம்பெறுவதாக வெளியாகும் தகவல்கள் குறித்து ஆஸ்திரேலியா கவலையடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகளுக்கான ஆஸ்திரேலியத் தூதுக்குழுவின் முதன்மைச் செயலாளர் லாரா நசோ, காணாமல் போதல் தொடர்பில் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களை நீதியின் முன் நிறுத்துமாறு இலங்கை அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

(சி)

# மொறட்டுவப் பல்கலையின் அனுமதிப் பரீட்சை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்த ஏற்பாடு

நல்லூர், மார்ச்15

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் சில கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான உளச்சார்புப் பரீட்சை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி, கட்டடக் கலைமாணி, வடிவமைப்புமாணி ஆகிய பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான உளச்சார்புப் பரீட்சையே யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்தப்படவுள்ளது.

மொறட்டுவப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் வேண்டுகோளுக்கு இணங்க இப்பரீட்சை எதிர்வரும் 22 ஆம், 23ஆம் திகதிகளில் இங்கு நடத்தப்படும் என யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணை குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (202-111)

## சாவகச்சேரி நகர சபையில் வாகனத் தரிப்பிடம்

சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட வாகனத் தரிப்பிட கட்டடத்தை மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி. ஜோன்சன் நேற்று வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

நகரசபை செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமாரும் கலந்து கொண்டார். (202-207)

# மாகாண தமிழ்மொழித்தினப் போட்டிகள் இன்று வேம்படியில் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம்,மார்ச் 15

வடமாகாண தமிழ்மொழித் தின போட்டிகள் உபமாகாண நிலையில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற உள்ளதாக வடமாகாண தமிழ்மொழி இணைப்பாளரும் பிரதிக்கல்விப் பணிப்பாளருமான நடராஜா அனந்தராஜ் தெரிவித்தார்.

இன்றைய நிகழ்ச்சியில் வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு,பேச்சு, பாவோதல், இசையும் அசைவும், இசை குழு, இசை தனி, நடனம் தனி, குழு நாட்டிய நாடகம், வில்லுப் பாட்டு, முஸ்லிம் நிகழ்ச்சி ஆகியவற்றிற்கான போட்டிகள் இடம்பெறவுள்ளதால் இப் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் மாணவர்கள் தமது பொறுப்பாசிரியர்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளாக நாடகம் மற்றும் நாட்டுக்கூத்துப் போட்டிகள் காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலேயே நடைபெறவுள்ளது. மேற்படி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களைக் கொண்டு வரவேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச் 15

சாவகச்சேரி வாரிவனநாத சிவன் ஆலய மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.29 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பித்து மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தலும் இடம்பெறும். (202-207)

* * *

யாழ்ப்பாணம், மார்ச.15

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்று வரும் விசேட லட்சார்ச்சனையின் இறுதி நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

விசேட பூசைகள், கணபதி ஹோமம், அபிஷேகம் என்பன இடம்பெறும்.

இந்த லட்சார்ச்சனை சென்றமாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (202-224)

* * *

யாழ்ப்பாணம், மார்ச்15

நல்லூர் சிவஞானப்பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடிச்சேலை ஆலயத்திற்கு எடுத்துவரப்படவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202)

# புதிதாக நியமனம் பெறும் வைத்தியர்கள் வடக்கு, கிழக்கில் கட்டாயம் பணிபுரிய வேண்டும்

## சுகாதார அமைச்சர் அறிவுறுத்து

புதிதாக நியமனம் பெறும் வைத்தியர்கள் வடக்கு மற்றும் கிழக்கில் கட்டாயம் ஒரு வருடம் பணியாற்ற வேண்டும். அவ்வாறு பணிபுரிந்தவர்கள் மாத்திரமே தென்னிலங்கைக்கு இடமாற்றம் பெறலாம் என சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

சுகாதர அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அங்கு அமைச்சர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மற்றும் கிழக்கில் பணியாற்றும் வைத்தியர்களுக்கு ஒரு வருடம் முடியும் முன்னரே தென்னிலங்கைக்கு இடமாற்றம் வழங்கினால் வடக்கு மற்றும் கிழக்கு வைத்தியசாலைகளை இழுத்து மூடவேண்டியேற்படும். வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களும் இந்நாட்டவர்களே. அரசின் இலவச சுகாதார சேவையைப்பெற அவர்களுக்கு முழு உரிமையும் உண்டு. எனினும், இதனை வைத்தியர்கள் சிலர் உணர மறுக்கின்றனர் தென்னிலங்கையில் சகல சலுகைகளையும் பெற்று பணியாற்றவே வைத்தியர்கள் விரும்புகின்றனர். எனினும், இவ்வாறான வைத்தியர்களின் விருப்பத்தை நிறைவேற்ற அரசாங்கம் ஒருபோதும் தயாரில்லை.

தெற்கிலிருந்து வைத்தியர்களை நாம் வடக்கு, கிழக்குக்கு அனுப்பி வைத்த பின்னரே அங்கு பணியாற்றுபவர்கள் இங்கு வரலாம். அதுவரை எவரும் எப்போராட்டம் செய்தும் தெற்குக்கு வரமுடியாது. எனவே, அநாவசிய போராட்டங்களில் குதித்து நோயாளர்களைச் சிரமத்திற்குட்படுத்த வேண்டாமென வைத்தியர்களிடம் அரசாங்கம் கோருகிறது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (202)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி -03 | 16.03.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: தசமி | பி.இ. 02.57வரை |
| நட்சத்திரம் : | புனர்பூசம் |
| | பின்னிரவு 3.58 வரை |
| சுபநேரம் : | 09.19 - 10.49 |
| ராகுகாலம் : | 04.49 - 06.19 |

# மழையால் நகரின் முக்கிய வீதிகள் சேதம்

கடந்த மூன்று தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாக நகரின் சில வீதிக்ள் சேதமடைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

யாழ்.நகருக்குள் நுழைவதற்கான முக்கிய வீதியான நாவலர் வீதியில் பருத்தித்துறை - கஸ்தூரியார் வீதிகளுக்கு இடைப்பட்ட பகுதி பெரும் சேதமடைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (202-111)

# யாழ். கல்வியற் கல்லூரிக்கு மேலும் 13 மாணவர்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்15

யாழ்.தேசிய கல்வியற் கல்லூரிக்கு மேலும் 13 மாணவர்கள் காத்திருப்போர் பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம் மாணவர்களை நாளை மறுதினம் திங்கட்கிழமை கல்லூரியில் படிவங்களைப்பெற்று எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார்.தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு:

பி. சதீஸ்(மானிப்பாய்), ரி. நிஷாந்தன்(திருநெல்வேலி), ஆ. ஜெயபிரியா(சுன்னாகம்), பி. தௌபீக் (சாவகச்சேரி), ஆ. ரஜித்தா(சுன்னாகம்), எஸ். துஷிதா (கோண்டாவில்), எஸ். சிவபாதம்(கோண்டாவில்), ஆர். தர்மலிங்கம் (கொக்குவில்), எஸ். ரேணுகா (கொடிகாமம்), என். கயல்நிஷா (மல்லாகம்), எஸ். நிஷாந்தினி (வேலணை), எம். நிந்துஜா (அளவெட்டி), வை. சதீசினி (தாவடி) (202)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கலோசனா முகுந்தன்
அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் நாகலிங்கம் காசிப்பிள்ளை**
அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும்அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் கழகம்,
யா/உயரப்புலம் மெ.மி.த.க.வித்தியாலயம். (72044)

## 30ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
**அருளானந்தம் கிறிஸ்ரி (சிங்கம்)**
(இளைப்பாறிய காப்புறுதி கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)



மண்ணில் 23.12.1937
விண்ணில் 14.02.2008

14.02.2008 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அருளானந்தம் கிறிஸ்ரி அவர்கள் இறைபதமடைந்த வேளையில் உடனிருந்து உதவியோருக்கும் நேரில் சமுகமளித்து ஆறுதல் அளித்தோருக்கும் இறுதி நல்லடக்க நிகழ்வில் பங்குகொண்டு எமது தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபித்தோருக்கும் தொலைபேசி மூலமும், கடிதம் மற்றும் தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பத்திரிகை மூலமும் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (15.03.2008) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் இடம்பெறும் திருப்பலியில் பங்குகொண்டு இவருக்காக செபிப்பதோடு, நாளை மறுதினம் (17.03.2008) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தயவுசெய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

களபாவோடை, ஏழாலை. (72022) மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 31 ★ 03 ★ 1964



உதிர்வு 14 ★ 02 ★ 2008

திருமதி
**இராசகுமார் யோகேஸ்வரி**

அம்மா வென்றழைக்க நீ இல்லலையே!
ஆறுதல் தர யாருமில்லையே!
அன்போடு அரவணைக்க நீ இல்லையே-எம்மை
அல்லலுறச் செய்து விண்ணுலகம் சென்றாயோ?
அல்லும் பகலும் அயராது உழைத்துக் காத்த உத்தமக் கணவன்
அன்பை, பாசத்தை கொட்டித் தீர்த்த ஆண் புதல்வர்கள்
அமைதி காக்கும் பெண் பாசப் பறவை எல்லோரையும்
தரணியில் தவிக்க விட்டு வாழ்வை
தவிடு பொடி ஆக்கி விட்டாயே தாயே!
பூத்துக் குலுங்கிய புதுமலர் நீ
பாதியிலே நீ உதிர்ந்ததால்
பாசமுள்ள குலக் கொடிகள்
பாரினிலே தவிக்கின்றனர்-நீ
பாருக்குள் மறையவில்லை
பரமனடி சென்றாயோ?

அடைக்கல நாயகி ஆலயத்தில் 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.
தகவல்
உயரப்புலம், ஆனைக்கோட்டை கொக்குவில் மேற்கு, கொக்குவில். (72025) மா. இராசகுமார் பிள்ளைகள்.

# விளையாட்டு நிகழ்வுகள் ஒத்திவைக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,மார்ச்15

வடமராட்சி இந்து பெண்கள் பாடசாலையில் இன்று நடைபெறவிருந்த ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டி காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறுமென பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (202)

* * *

வலி.வடக்கு,மார்ச்15

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் இன்று நடைபெறுவதாக இருந்த 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி மழை காரணமாக நடைபெறமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டி பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டது. (202-86)

* * *

வலி.வடக்கு,மார்ச்15

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இன்றும் நாளையும் நடைபெற இருந்த ஆண்கள், பெண்கள் அணிகளுக்கான கிரிக்கெட் போட்டிகள் நடைபெறமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் இடம் பெறும் திகதி, இடம் என்பன பின்னர் கழகங்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தவறிவிட்டது

புவனேஸ்வரன் நிரோஜன் என்பவருடைய தே.அ.அட்டை (902732306V) மல்லாகத்திற்கும் கந்தரோடைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- கந்தரோடை மேற்கு,சுன்னாகம்.
T.P:0602212653

## இறைச்சிக் கோழி விற்பனை

புறோயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## தொலைபேசி இணைப்பு விற்பனைக்கு

சிறீலங்கா ரெலிகொம் (S.L.T) தொலைபேசி இணைப்பு உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-2227658
எவரெஸ்ட் வோர் வேக்ஸ்
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# சம்மேளனக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்15

நுணாவில் கிழக்கு விவசாய சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தென்மராட்சி கலை மன்ற மண்டபத்தில் சம்மேளனத் தலைவர் செ.தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்திற்கு விருந்தினராக தென்மராட்சி பெரும்பாக அலுவலர் திருமதி எஸ் ஜெயதீஸ்வரி கலந்து கொள்வார் என சம்மேளன செயலாளர் தெரிவித்தார். (202-207)

## படிவம்

க.பொ.த (உ.த) -2008 ... பரீட்சை - தனிப் ... பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப் படிவம் ... ண்டு.
Bharathy Pathippakam, 430, K. K. S. Road, Jaffna.

# காசநோய் தடுப்பு தினம் அனுஷ்டிப்பு

நல்லூர்,மார்ச்15

சர்வதேச தேசிய காசநோய் தடுப்பு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம், பண்ணையில் உள்ள மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் காசநோய் தடுப்பு தின நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இந் நிகழ்வுகள் வைத்திய கலாநிதி சி. யமுனாநந்தா தலைமையில் நடைபெறும்.

காசநோய் தடுப்பு தினத்தையொட்டி கொடிதினத்தை அனுஷ்டிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காசநோய் தடுப்பு தினத்தையொட்டிய ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (202-111)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் இளையவன் வல்லிபுரம்**
(இளைப்பாறிய அதிபர் நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை)
அமரத்துவமடைந்த எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் இ.வல்லிபுரம் அவர்களுக்கு எமது கண்ணீரஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை.

## Calling for Tender -Teaching Hospital, Jaffna.

### Renovation of Temporary Emergency Unit

01. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tender for Renovation of Temporary Emergency Unit, TH, Jaffna up to 10.00am on 26.03.2008. Tender form may be collected from Director, TH, Jaffna up to 22.03.2008 on payment on non refundable deposif of Rs.42,500/-
02. Tender will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening of Tenders.
03. Tender forms are issued only contractors have been valid registration in Grade M 7 and above in the field of Building Constructions and other Institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).
04. Sealed Tender may be despatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before. 10.00am on 26.03.2008
05. Tender Document may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.
06. For further details please contact Hospital Secretary, TH,Jaffna

The Chairman,
Divisional Tender Board,
Teaching Hospital, Jaffna.


## மகளிருக்கான 4 நாள் அழகுக்கலை பயிலமர்வு

அடிப்படை முக அழகுக்கலை (**Basic Facial**) கூந்தல் அலங்காரங்கள், சருமப் பாதுகாப்பு மற்றும் இந்து,கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், மடிசார்,குஜராத், சூர்க்காஸ், சிங்கப்பூர் முறைகளிலான சேலை அணிவிக்கும் முறைகள் என்பன எதிர்வரும் 20ம், 21ம், 22ம், 23ம் நாட்களில் காலை 9.00 மணிமுதல் பி.ப. 1.00 மணிவரை போதிய விளக்கங்களுடனும் குறிப்புகளுடனும் குறைந்த கட்டணத்தில் நடைபெறும். வகுப்புகளில் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் வழங்கப்படும்.

மேலும் விபரங்களை பி.ப. 1.00வரை அறிந்து கொள்ளலாம்
**கலாலயா**
பயிற்சியகம்
23 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சிநிலையம்.
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)


## முதலாம் வருட நினைவஞ்சலி / மூன்றாம் வருட நினைவஞ்சலி





**அமரர் நாகலிங்கம் நடேசன்**
தோற்றம் 20.02.1926 — மறைவு 26.03.2007

ஆண்டொன்று போனாலும்
ஆறிடுமோ எம்துயரம்-வீடே
இருண்டிங்கு வாசலும் வெறிக்குதே
எண்ணித் தவிக்கின்றோம்-நீங்கள்
எமைப் பிரிந்து சென்றதனை

6/19- மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**அமரர் தரணிகா யோகேஸ்வரன்**
தோற்றம் 28.06.1983 — மறைவு 09.05.2005

தரணியில் பூத்திங்கு தரணி
என்று பெயர் பெற்றாய்-நீ
விண்ணுலகம் சென்றதற்குள் மூன்றாண்டு
ஓடினவோ எமைப் பிரிந்து
சென்றாலும் நாம் மறவோம் உன்னினைவை

குடும்பத்தினர்.

# தகர்ந்தது ஆஸ்திரேலிய அணியின் ஆதிக்கம் தரவரிசையில் தென்னாபிரிக்கா முதலிடம்

## நேற்றைய போட்டியில் பங்களாதேஷை 7 விக்கெட்டுகளால் வீழ்த்தியதால்

டாக்கா, மார்ச் 15

பங்களாதேஷுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் தென்னாபிரிக்கா 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா வழித்தெடுத்தது.

தொடரை அப்படியே அள்ளியதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் சபையின் தரவரிசையில் ஆஸ்திரேலியாவின் ஆதிக்கத்தைத் தகர்த்து முதலிடத்தைப் பிடித்தது தென்னாபிரிக்கா. இத்தொடர் ஆரம்பமாகும் போது தரவரிசைப் புள்ளிகளில் 0.191ஆல் ஆஸ்திரேலியாவை விடப் பின்தங்கியிருந்த தென்னாபிரிக்கா தற்போது 129 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது. ஆஸ்திரேலியா 127 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது.

பங்களாதேஷுக்குச் சுற்றுப்பயணம் செய்திருந்த தென்னாபிரிக்கா அணி முதலில் பங்குபற்றி டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் வென்றது. அதன்பின்னர் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்குபற்றிது. ஏற்கனவே முதலிரண்டு போட்டிகளிலும் வென்று தொடரை வென்றுவிட்டது தென்னாபிரிக்கா. இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது மற்றும் கடைசிப் போட்டி நேற்று டாக்காவில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அல்பி மோர்கீலின் வேகம் ஆரம்பத்திலிருந்தே அச்சுறுத்த பங்களாதேஷ் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. அணிசார்பாக சஹாரியார் நபீஸ் 25 ஓட்டங்களையும், நஸிமுடீன் மற்றும் பர்ஹட் ரீசா ஆகியோர் தலா 20 ஓட்டங்களையும் அதிகூடிசமாகப் பெற்றனர். பங்களாதேஷ் அணி இறுதியில் 42.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 143 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.


தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் அல்பி மோர்கீல் 29 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளையும், ஜெகான் போத்தா 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

இலகுவான இலக்கைக் கலைத்த தென்னாபிரிக்கா அணி, ஆரம்ப வீரான ஹேர்சல் கிப்ஸை 10 ஓட்டங்களுடன் விரைவாக இழந்தது. அடுத்துவந்த பீற்றஸன் 24 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் இணைந்த சிமித் - டீ வில்லியர்ஸ் ஜோடி அணியை வெற்றிக்கரை நோக்கி அழைத்துச் சென்றது. அணி வெற்றியை நெருங்கிய போது டீ வில்லியர்ஸ் 40 ஓட்டங்களுடன் (37 பந்துகள், 7 பவுண்டரிகள்) ஆட்டமிழந்தார்.

எனினும், மறுமுனையில் சிறப்பாக ஆடிய அணித்தலைவர் கிரேம் சிமித் 34.2ஆவது ஓவரில் அணிக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார். ஆட்டமிழக்காமலிருந்த அவர் 94 பந்துகளில் 3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 68 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக அல்பி மோர்கீலும், தொடரின் சிறப்பாட்டக்காரராக கிரேம் சிமித்தும் தெரிவானார்கள்.

### விளையாட்டு அரங்குகளில்


வெற்றிக்கிண்ணத்துடன் தென்னாபிரிக்க அணித் தலைவர் சிமித்

# அன்டர்ஸனின் வேகத்தில் நியூஸிலாந்து அம்போ 148 ஓட்டங்களால் இங்கிலாந்து முன்னிலையில்

வெலிங்டன், மார்ச் 15

வெலிங்டனில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் பெற்ற 342 ஓட்டங்களுக்குப் பதிலளித்து ஆடிய நியூஸிலாந்து அணி, அன்டர்ஸனின் வேகத்தில் மிரண்டு 198 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. சிறப்பாகப் பந்துவீசிய அன்டர்ஸன் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தினார்.

144 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாம் இன்னிங்ஸைத் தொடங்கிய இங்கிலாந்து அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 4 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன்படி இங்கிலாந்து தற்போது 148 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது.

முன்னதாக, நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தை 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 291 ஓட்டங்கள் என்ற நிலையில் இங்கிலாந்து ஆரம்பித்தது. அணித்தலைவர் கொலிங்வூட் 48 ஓட்டங்களுடனும், விக்கெட் காப்பாளர் அம்புரோஸ் 97 ஓட்டங்களுடனும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். சிறப்பாக ஆடிய அம்புரோஸ் டெஸ்ட் அரங்கில் கன்னி சததத்தை நிறைவுசெய்து மகிழ்ந்தார். கொலிங்வூட் 9ஆவது அரைச்சதத்தைப் பூர்த்திசெய்தார்.

நேற்றைய ஆட்டத்தில் 9 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அம்புரோஸ் விரைவாக வெளியேறினார். அவர் 149 பந்துகளில் 102 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார். தொடர்ந்துவந்த வீரர்கள் விரைவாக நடையைக் கட்டினர். அணித்தலைவர் கொலிங்வூட் 65 ஓட்டங்களுடன் மார்க் கிலெஸ்பியின் வேகத்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார்.

இறுதியில் இங்கிலாந்து அணியின் முதல் இன்னிங்ஸ் 107 ஓவர்களில் 342 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில் மார்க் கிலெஸ்பி 4 விக்கெட்டுகளையும், ஜேக்கப் ஒரம் 3 விக்கெட்டுகளையும், கைல் மில்ஸ் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலளித்து தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய நியூஸிலாந்து அணிக்கு ஆரம்பத்திலிருந்தே அன்டர்ஸன் அச்சுறுத்தலாக இருந்தார். இவரது வேகத்தில் ஆரம்ப வீரர்களான மத்தியூ பெல் (0), ஜிம்மி கௌவ் (7) ஆகியோர் விரைவாக விக்கெட்டைப் பறிகொடுத்தனர். அடுத்தவந்த பிளெமிங் (34), சிங்ளேயர் (9), ரோஸ் ரெய்லர் (53) ஆகியோரும் அன்டர்ஸனின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.

பின்வரிசை வீரர்களில் அணித்தலைவர் டானியல் வெட்ரோறி மாத்திரம் போராடினார். மற்றைய வீரர்கள் எவரும் சிறப்பாக ஆடவில்லை. இறுதியில் நியூஸிலாந்தின் முதல் இன்னிங்ஸ் 57.5 ஓவர்களில் 198 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. கடைசிவரை ஆட்டமிழக்காமலிருந்த வெட்ரோறி 50 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் காயத்திலிருந்து மீண்டு இந்த டெஸ்ட்டில் இடம்பிடித்திருந்த ஜேம்ஸ் அன்டர்ஸன் 73 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார். கொலிங்வூட் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

## பணிஸுக்குள் பல்லி மண்டபம் முகாம் அகதிகளுக்கு மயக்கம்

மண்டபம், மார்ச்.15

மண்டபம் அகதிகள் முகாமில் இறந்த பல்லியுடன் கிடந்த பணிஸைச் சாப்பிட 10 பேருக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து வெளிவந்துள்ள தகவல்கள் வருமாறு:-

மண்டபம் முகாம் அகதிகள் நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு மாரியம்மன் கோவில் அருகே உள்ள மூர்த்தி என்பவரது கடையில் பணிஸ் வாங்கினர். இருட்டில் பணிஸைச் சாப்பிடுகையில் தடிப்பான பொருள் தட்டுப்பட்டது. வெளிச்சத்தில் பார்த்தபோது அது பல்லி எனத் தெரிந்தது. பணிஸை இரண்டு வயது குழந்தை ஹரினி உட்பட 10 பேர் சாப்பிட்டிருந்தனர். அவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. அவர்கள் முகாம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர்.

## அல் - குவைதாவுடன் சதாமுக்கு தொடர்பு இல்லை - பென்டகன்

வாஷிங்டன், மார்ச் 15

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கும், அல் - குவைதா அமைப்பிற்கும் எந்தவித நேரடித் தொடர்பும் இல்லையென்று அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஈராக் மீது போர் தொடுத்ததை புஷ் நிர்வாகம் நியாயப்படுத்தி வந்தமைக்கு எதிராக இந்த ஆய்வு முடிவுகள் அமைந்திருந்தன எனக் கூறப்படுகிறது.

பென்டகன் நடத்திய இந்த ஆய்வு முடிவு இணையத்தளத்தில் வெளியிடப்படவில்லை. பத்திரிகைகளுக்கும் வழங்கப்படவில்லை.

கடந்த 5 ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் சதாம் ஹுசைனின் கூட்டாளிகள் பலரிடம் விசாரித்ததில் அவருக்கும், அல் - குவைதாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

# மனித உரிமைப் பாதுகாவலரென நடிக்காதீர்கள்! அமெரிக்காவைக் கடுமையாகத் தாக்குகிறது சீனா

பீஜிங், மார்ச் 15

மனித உரிமைப் பாதுகாவலர் என காட்டிக் கொள்வதை அமெரிக்கா கைவிடவேண்டும் என்று அந்த நாட்டை சீனா கடுமையாக தாக்கியுள்ளது.

'சீனா கம்யூனிஸ்டு நாடு. அது எதிர்ப்புக் குரல் எழுப்புவர்களையும் கிளர்ச்சியாளர்களையும், பிரிவினை கோருபவர்களையும், மதவாதிகளையும் அடக்கி ஒடுக்குவதில் அதிக கவனம் செலுத்துகின்றது. மனித உரிமைகள் பற்றி அதிகம் கவலைப்படாது. சீனாவில் மனித உரிமை மீறல்கள் அதிக அளவில் இருக்கின்றன.' - எனக் கூறி அதற்கு அமெரிக்க அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. மனித உரிமை மீறல்களை கட்டுக்குள் கொண்டுவரவேண்டும் என்று சீனாவை எச்சரித்துள்ளது. இது சீனாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தும் விவகாரம் ஆகும்.

அமெரிக்காவின் வெளிநாட்டு அமைச்சகம் சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சீனாவில் மனித உரிமை மீறல்கள் மோசமாகவுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. இதனால் ஆத்திரம் அடைந்த சீனா, அமெரிக்கா மீது தன் ஆத்திரத்தைக் கொட்டியுள்ளது.

''மனித உரிமையின் பாதுகாவலர் என்று கூறிக்கொள்வதற்கு அமெரிக்காவுக்கு எந்தத் தகுதியும் இல்லை. மனித உரிமை பாதுகாவலர் என காட்டிக் கொள்வதை கைவிட்டு விட்டு, அது தன் நாட்டில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.'' - என்று சீன வெளிநாட்டு அமைச்சரக அதிகாரி கின் காங் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ''மனித உரிமைப் பிரச்சினையில் அமெரிக்கா இரட்டை வேடம் போடுகிறது. மனித உரிமை என்ற பெயரில் மற்றைய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை அமெரிக்கா கைவிட வேண்டும்.'' - என்று குறிப்பிட்டார்.

''ஒலிம்பிக் போட்டி சீனாவில் நடப்பதை ஒருவாய்ப்பாகப் பயன்படுத்தி, சீனாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியை மாற்றுவதற்கான முயற்சியில் மேற்கத்தேய நாடுகளில் உள்ள சீன எதிர்ப்பு சக்திகள் இறங்கி உள்ளன.'' - என்று சீன கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஜாவோ குயிஸ்கெங் தெரிவித்து இருக்கிறார்.

சீனாவில் மதங்களின் மீதான கட்டுப்பாடு, உணவு பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் ஆகியவைகள் எல்லாம் வெளிநாட்டுப் பத்திரிகைகளில் பெரிதுபடுத்தப்படுகின்றன; தவறாக சித்தரிக்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்.

### உலக அரங்கில்

## ஹிண்ட்ராப் தலைவர் மனோகரனை விடுவிக்க மனைவி பிரதமரிடம் கோரிக்கை

கோலாலம்பூர், மார்ச் 15

மலேஷியாவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஹிண்ட்ராப் தலைவர் மனோகரனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என அவரது மனைவி கோரிக்கை விடுத்துள்ளார்.

மலேஷியாவில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர், சம உரிமை கேட்டு போராட்டம் நடத்தினர். இதில், வன்முறை ஏற்பட்டது. போராட்டம் நடத்திய ஹிண்ட்ராப் அமைப்பின் தலைவர் மனோகரன், உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர். கடுமையான சட்டத்தின் கீழ், அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சமீபத்தில், மலேஷியாவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மனோகரன் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இந்நிலையில் மனோகரனை விடுதலை செய்யுமாறு அவரது மனைவி, மலேஷியப பிரதமர் அஹமது படாவியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பா மனோகரனின் மனைவி புஷ்பநீலா கூறியவை வருமாறு:-

''எனது கணவர் மனோகரனுக்கு மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்துள்ளனர். இதன்மூலம், அவரை விடுதலை செய்ய வேண்டும் என மக்கள் வலியுறுத்தியுள்ளனர். மக்களின் தீர்ப்பை ஏற்று, பிரதமர் படாவி, எனது கணவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். பிரதமர் கூறினால், மனோகரன் விடுவிக்கப்படுவார் எனக் கூறுகின்றனர். இதனை பிரதமர் கவனத்தில் கொள்ள வேண்டும்.'' - இவ்வாறு புஷ்பநீலா கூறினார்

## அமைச்சரவைத் தெரிவு: சர்தாரி - நவாஸ் ஒப்பந்தம்

இஸ்லாமாபாத், மார்ச் 15

கூட்டணி ஆட்சி அமைக்கவுள்ள பாகிஸ்தான் மக்கள் கட்சி, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) ஆகியன அமைச்சரவையைத் தெரிவதில் உடன்பாடு கண்டுள்ளன.

மொத்தம் உள்ள அமைச்சர் பதவிகளில் 54 சதவீதத்தை பெனாஸிர் பூட்டோவின் கட்சிக்கும், 40 சதவீத அமைச்சர் பதவிகளை நவாஸ் ஷெரீப் கட்சிக்கும், மீதமுள்ள 6வீதம் பதவிகளை அவாமி கட்சிக்கும் அளிப்பது என உடன்பாடு எட்டப்பட்டது. அது போல பஞ்சாப் மாகாணத்தில் ஆட்சி அமைப்பதிலும் உடன்பாடு முடிவானது.

நாடாளுமன்றக் குழுக்களைப் பொறுத்த வரை சில தலைவர்கள் பதவிகளைப் பெறுவதில் போட்டி ஏற்பட்டுள்ளது. எனவே அது குறித்துபேச்சுகள் நீடிக்கின்றன.

# அம்பாறையில் புலிகள் இருவர் உயிரிழப்பு

அம்பாறையில் பொத்துவில் மற்றும் சியாம்பலாண்டுவப் பகுதிகளுக்கு இடையில் உள்ள இரட்டைக் குளம் பகுதியில் விசேட அதிரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகள் எனக் கருதப்படும் குழுவினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு மோதல் இடம்பெற்றுள்ளது.

இம்மோதலின் பின்னர் விசேட அதிரடிப் படையினர் அப்பகுதியில் மேற்கொண்ட தேடுதலின்போது விடுதலைப் புலிகள் எனக் கருதப்படும் இருவரின் சடலங்களையும் விடுதலைப் புலிகளால் விட்டுச் சென்றவை எனக் கூறப்படும் வெடிப்பொருள்களையும் மீட்டனர் எனப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சடலங்கள் பொத்துவில் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த உதவுமாறு இந்தியாவிடம் டக்ளஸ் கோரிக்கை

புதுடில்லி,மார்ச்15

இலங்கையில் சமா தானத்தை ஏற்படுத்திக்கொள்வதற்கு இந் தியா உதவவேண்டும் என்று இந்திய வெளி யுறவுச் செயலாளர் சிவ் சங்கர் மேனனிடம அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறுபான்மை இனத்தவர் மாநாடு ஒன்றில் கலந்துகொள்ளும்பொருட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் இந்தியா சென்றிருந்தார். அச்சமயமே டக்ளஸ் இந்த வேண்டுகோளை விடுத்திருந்தார் என்று சமூக சேவைகள் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும் அமை தியை ஏற்படுத்துவதற்கும் இந்தியா தனது பங்களிப்பை வழங்கும் என்று சிவ்சங்கர் மேனன் தெரிவித்தார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இந்த விஜயத்தின் போது இந்திய பாதுகாப்பு ஆலேசகர் எம்.கே. நாராயணனையும் அமைச்சர் டக்ளஸ் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் வெகுவிரைவில் மேற்கொள்ளப் படுமென தான் எதிர்பார்ப்பதாக நாராணயன் தெரிவித்துள்ளார்.

# இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்காவில் கவலையளிக்கும் மனித உரிமை நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசுடன் தொடர்ந்தும் பேச்சுகள் நடத்துவதை நாம் எதிர்பார்த்துள்ளோம் - என்று உள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் 2007ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் தொடர்பான அறிக்கை குறித்து வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்கைச் சந்திந்துப் பேசிய போது -

அமெரிக்காவின் அறிக்கை குறித்துக் கவலையும் ஆட்சேபமும் தெரிவித்ததாக பாதுகாப்பு அமைச்சின் இணைத் தளத்தில் தகவல் வெளியிடப்பட்டதன் பின்னரே கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தனது ஊர்ஜிதப்படுத்தும் அறிக்கையை வெளியிட்டது என்பது குறிப்படத்தக்கது.

### இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் இணைத் தளம் தனது செய்தியில் பின்வருமாறு தெரிவித்திருந்தது-

2007ஆம் ஆண்டில் இலங்கையில் மனித உரிமை நடவடிக்கைகள் சம்பந்தமாக திரிபுபடுத்தப்பட்ட தகவல்கள் அமெரிக்க வெளிநாட்டு அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களும் மறைமுகமானதும் தந்திரமானதும் அவதூறானதுமான மிகைப் படுத்தப்பட்ட அம்சங்கள் அந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கையைத் தரம் தாழ்த்தும் உள் நோக்கம் கொண்ட தரப்புகளால் வேண்டுமென்றே தவறான கருத்துக்களை வெளியிடும் சாராரின் நிலைப்பாட்டுடன் அமெரிக்க அரசின் அறிக்கையில் ஒருமைப்பாடு காணப்படுவது சந்தேகத்தைத் தருவதாகும்.

ஓர் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கை பத்திரிகைச் செய்திகளையும், ஊகங்களையும் வெறுமனே கேள்விப் பட்டவற்றையும் ஆதாரமாகக் கொண்டு - கேள்விச் செவியனாக தயாரிக்கப்பட்டிருப்பது குறித்து இலங்கை வருத்தமடைகிறது - என்று குறிப்பிடப்பட்டிருந்தது. (அ)

# கொழும்பில் நாளை 'சிலுவையடியில்' நாடகம்

திருமறைக் கலாமன்றம் வருடந்தோறும் மேடையேற்றிவரும் இயேசுநாதரின் திருப்பாடுகளைச் சித்தரிக்கும் காட்சி இம்முறை 'சிலுவையடியில்' என்ற பெயரில் கொழும்பில் மேடையேறுகின்றது.

கொழும்பு, மருதானையில் அமைந்துள்ள டவர் மண்டபத்தில் நாளை மாலை 3 மணி மற்றும் 6 மணி ஆகிய நேரங்களில் இரு காட்சிகளாக மேடையேற்றப்படவுள்ளது.

# ஆண்டான்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (சி)

# 2004 இற்குப் பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசின் கடன் சுமை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது. ஓரிடத்தில் கடனைப்பெற்று, மறு இடத்தில் ஏற்கனவே பெற்ற கடனை அடைத்து வருகிறது இந்த அரசு.

அந்தக் கடன்களின் வட்டிவீதம் அதிகரித்துக்கொண்டு போகின்றது. அதை மக்களிடமிருந்தே இந்த அரசு அறவிடுகிறது. அதற்காகவே பொருள்களினதும் விலையை அரசு அதிகரித்துக்கொண்டேபோகிறது.

அரசின் சுமையை - அரசு விடும் பிழைகளுக்கான தண்டனையை - இந்நாட்டு மக்களே சுமக்கின்றனர்.

2008 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் 75 ஆயிரம் கோடி ரூபா தான் வருமானமாக எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தப் பாரிய தொகைக் கடனை எப்படி அரசால் செலுத்த முடியும்?

பொருள்களின் விலைகளை அதிகரித்து அதன்மூலம் மக்களிடமிருந்து பறிக்கப் படும் பணத்தைக் கொண்டே இக்கடனை அரசு அடைக்கத் திட்டமிட்டுள்ளது - என்றார் அவர். (அ-சி)

# தென்மராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மாடுகளே இன்று கையளிக்கப் படவிருக்கின்றன.

கைவிடப்பட்ட மாடுகளில் இடப்பட்ட குறிகளில் அவற்றை இனங்கண்டு அதன் கன்றுகளும் கையளிக்கப்படும்.

தமது மாடுகளைக் காணவில்லை என பொலிஸ் நிலையத்திலும் கிராம சேவையாளர்களிடமும் முறைப்பாடுகள் செய்தவர்கள் இன்று சமுகமளித்து தமது மாடுகளை இனம் காட்டி பெற்றுக்கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-202-207)

# அல்லைப்பிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவரின் அடையாள அட்டை மூலம் அவர் வட்டக்கட்சியைச் சேர்ந்தவர் என இனங்காணப்பட்டுள்ளார்.

இதேவேளை -

செல்வராசா கோடீஸ்வரன் என்பவர் கொல்லப்பட்டார் என்றும் கே.சுதாகரன் (வயது26) என்பவர் காயமடைந்தார் என்றும் படகில் இருந்த ஆறுபேரைப் படையினர் கைது செய்தனர் என்றும் இணையத் தளம் ஒன்று தெரிவித்தது. (அ-1)

# ரூபவாஹினியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க் கப்பட்டுள்ளார். சில காயங்களுக்காக அவருக்குத் தையல் போடப் பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் 27 ஆம் திகதி ரூபவாஹினிக்குள் குண்டர் குழு ஒன்றுடன் புகுந்த அமைச்சர் மேர்வின் சில்வா அங்கு ரகளையில் ஈடுபட்டமையை அடுத்து அங்கு அப்போது ஒன்று திரண்ட ரூப வாஹினி ஊழியர்களால் தாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் ரூபவாஹினி ஊழியர்களின் பிரதிநிதிகள் பல் வேறு இடங்களிலும் தாக்குதலுக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

இந்த வரிசையில் நேற்றுத் தாக்குதலுக்கு இலக்கான ஹெட்டிகே ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் விநியோகப் பிரி வின் பிரதிப் பணிப்பாளராகப் பணியாற்றி வருகின்றார்.

ரூபவாஹினி ஊழியர்கள் இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கான்றமை தொடர் பாக நேற்று முன்தினம் மாலையில் கொழும் பில் பாதுகாப்பு அமைச்சில் உயர்மட்டக் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. அதில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷவும் கலந்துகொண்டிருந்தார்.

அந்தக் கூட்டத்திலே பங்குபற்றி முக்கிய கருத்துக்களைக் கூறியவர்களுள் ஹெட்டிகேயும் ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கூட்டத்தில் வைத்து எதிர்காலத்தில் ரூபவாஹினி ஊழியர்களின் பாதுகாப்புக்கு உறுதிமொழி வழங்கப்பட்டதாகத் தெரிகின்றது.

# ரணிலுக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீரோட்டத்தில் இணைந்து கொண்டனர் எனவும், தாங்கள் ஆயுத வெறியர் களோ, யுத்த வெறியர்களோ அல்லர் என் றும் தெரிவித்துள்ள அவர், தமது பாதுகாப்பிற்காகவே தாங்கள் ஆயுதங்களை ஏந்துகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க போன்ற தேசியத் தலைவர் ஒருவர் தம்மைப் பற்றி முழுமையாகப் பிழையான கருத்தை ஏற்படுத்தி வருகிறார் எனவும் தெரிவித்துள்ளார் அவர். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுமாறு ரணில் விக்கிரமசிங்க விற்குத் தாங்கள் சவால் விடுகிறார்கள் என்றும் மட்டக்களப்பில் ஐக்கிய தேசியக் கட்சி ஓர் ஆசனத்தைக்கூடப் பெறாது என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தான் சிறுவயதில் சேர்த்துக் கொள்ளப்பட்ட போது தனக்காகக் குரல் கொடுக்க சர்வதேச அமைப்போ அமெரிக்காவோ ரணில் விக் கிரமசிங்கவோ இருக்கவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (சி)

# குறைந்த...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெங்காயம், புகையிலை, வாழைப்பழம் என்பவற்றின் ஏற்றுமதி தொடர்பாக ஆராயப்பட்டது.

கப்பல் கட்டணம் அதிகமாக காணப்படுவதால் உற்பத்தியாளர்களின் கொள் வனவு விலையில் மாற்றம் செய்வதன் மூலமே சீர்செய்ய முடியும் என்று உள்ளூர் உற்பத்தி பொருள் களை ஏற்றும் முகவர்கள் கருத்துத் தெரிவித்தனர். அப்போது யாழ்ப் பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றத்தினர் தாம் குறைந்த கட்டணத்தில் மெற்றிக் தொன் ஒன்றுக்கு 55 டொலர் வீதம் கப்பல் கட்டணம் அறவிடுவதாகத் தெரிவித்தார்கள்.

அரசாங்க அதிபர் இதே போன்று ஏனைய கப்பல் முகவர்களும் தமது கப்பல் கட்டணத்தை குறைத்து உள்ளூர் உற்பத்தி ஏற்றுமதியை ஊக்குவிக்க முன்வர வேண்டும் என்று அரச அதிபர் கேட்டுக் கொண்டார்.

தற்போது தாம் ஓர் அந்தர் வெங்காயத்தை ரூபா 1750 முதல் ரூபா 2000 வரையில் கொள்வனவு செய்வதாகவும் கிலோ ஒன்றுக்கு ரூபா 30 கப்பல் கட்டண மாக செலுத்துவதாகவும் ஏற்றுமதி முகவர் கருத்து தெரிவித்தார்.

இதேவேளை, புகையிலைக்கான கிராக்கி தென்பகுதியில் குறைவாகக் காணப்படுவதால் புகையிலை ஏற்றுமதி செய்வது குறைவடைந்துள்ளதாக ஏற்றுமதி முகவர்கள் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து புகையிலை உற்பத்தியைக் குறைத்து வெங்காயச் செய்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம் ஊடாக மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

தற்போது யாழ்ப்பாணத்தில் வாழைப்பழத்தின் விலை குறைவடைந்துள்ள போதும் தென்பகுதியிலும் அதன் விலை குறைவாக காணப்படுவதால் தாம் அதனை இப்போது ஏற்றுமதி செய்வதில்லை என ஏற்றுமதி முகவர்களால் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து வெங்காயத்தை கப்பல் மூலம் அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று கூட்டத்தில் ஏகமன தாகத் தீர்மானிக்கப்பட்டது. (அ-1)

# கொட்டாஞ்சேனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டாஞ்சேனையில் வசித்த குடும்பத்தவரான கோவிந்தசாமி ராஜநாதன் நேற்றுமுன்தினம் காலை 5 மணிக்கும், ரெங்கநாதன் அகிலன் ரயில் நிலையத்திற்கு அருகில் வைத்தும் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டனர் என்று உறவினர்கள் பிரதி அமைச்சரிடம் முறையிட்டனர்.

பிரதி அமைச்சர் மேற்கொண்ட நடவடிக்கைகளால் குறிப்பிட்ட நபர்கள் 4 ஆம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


**For Sale**

Toshiba Satellite L 20 Lap top Intel pentium M 1.6 Gghz, 40 GbB Harddisk, 712 MB Ram,Combo 15" Diagonal TFT Active - Matrix LCD

T.P. 0713497004

**தமிழ் மாதிரிப்பரீட்சை A/L 2008**

* பகுதி I, பகுதி II அடங்கலாக 12 பரீட்சைகள்
* வெளி மாணவர்களும் A/L 2009 மாணவர்களும் தோற்றமுடியும்
* முதல் இரண்டு பரீட்சைகளும் 20ஆம் 21ஆம் திகதிகளில் ஆரம்பம்
* நாவலர் - யாழ்.நகர், ஐடியல் - யாழ்.நகர், சண்டிலிப்பாய், NEI நெல்லியடி, அறிவகம் - அச்சுவேலி, ஏசியன் - கொக்குவில் மற்றும் மதுரம்ஸ் ஆகிய நிறுவனங்களில் பரீட்சைகள் நடைபெறும்.

19ஆம் திகதிவரை அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியர் : உங்கள் A.K.கீர்த்திராஜன்

**தரம்:5-2008புலமைப்பரிசில்**

வெற்றித்தேர்வு வினாத்தாள்! முதல் 9 வரை

சகல புத்தகசாலைகளிலும்

வெற்றித்தேர்வு 9 மாவட்ட ரீதியிலான பரீட்சை நாளை ஞாயிறு

6am, 8am, 10am, 2pm, 4pm

கட்டணம் ரூபா:30மட்டும்

பரீட்சை நடைபெறும் இடங்கள்.

நல்லூர் சயன்ஸ் அக்கடமி

முதலாந் தவணைப் பரீட்சை-2008 வினாத்தாள்

அக்கடமி வெளியீடு என்று கேளுங்கள்.

மலரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு

| Specially Designed for Government staffs & Officers | | Specially Designed for ICT Students | |
|---|---|---|---|
| 1.8 GHz Intel Pentium Dual Core Processor | (3 Years) | 1.6 GHz Intel Celeron Dual core | (3 Years) |
| AsRock Mother Board (Conroe-1333) | (2 Years) | AsRock Mother Board (Conroe-1333) | (2 Years) |
| 1GB DDR-II Kingston Ram | (3 Years) | 1GB DDR-II Kingston Ram | (3 Years) |
| 80GB SATA HDD (Maxtor) | (3 Years) | 80GB SATA HDD (Maxtor) | (3 Years) |
| 15" View Sonic Monitor | (3 Years) | 15" View Sonic Monitor | (3 Years) |
| ATX Cabinet (MS 06/05) | (1 Year) | ATX Cabinet (MS 06/05) | (1 Year) |
| PS/2 Key Board | | PS/2 Key Board | |
| Optical Mouse | | Optical Mouse | |
| SONY DVD Writer | (1 Year) | | |
| Only 44,400/= | | Only 36,700/= | |

| Specially Designed for IT Professional | | | |
|---|---|---|---|
| 1.8 GHz Intel Pentium Dual Core Processor | (3 Years) | 1.8 GHz Intel Pentium Dual Core | (3 Years) |
| ASUS Mother Board (P5GC-MX-1333) | (3 Years) | AsRock Mother Board (Conroe-1333) | (2 Years) |
| 1GB DDR-II Kingston Ram | (3 Years) | ASUS Mother Board (P5GC-MX-1333) | (3 Years) |
| 160GB SATA HDD (Samsung) | (3 Years) | INTEL Mother Board (GCNL) | (3 Years) |
| 15" View Sonic Monitor | (3 Years) | 512MB DDR-II Kingston Ram | (3 Years) |
| ATX Cabinet (MS 01/02/03/04) | (1 Year) | 1GB DDR-II Kingston Ram | (3 Years) |
| PS/2 Key Board | | 80GB SATA HDD (Maxtor) | (3 Years) |
| Optical Mouse | | 160GB SATA HDD (Samsung) | (3 Years) |
| SONY DVD Writer | (1 Year) | 15" View Sonic Monitor (Silver Black) | (3 Years) |
| UPS Power tree | (1 Year) | ATX Cabinet (MS-01/02/03/04/05/06) | (1 Year) |
| Only 53,100/= | | UPS Power tree | (1 Year) |
| | | 17" LCD wide screen | (3 Years) |

Scanner (Cannon LIDE25), TV Cards, Modem (Index, Manhattan- Lifetime warranty), DVD Writer (ASUS, SONY), Key Board, Mouse (A4 Tech, Manhattan - Lifetime warranty, feedx), Speakers, Head phone (Manhattan - Lifetime warranty), Tonner, VGA Card, USB Light, USB Hub, Card reader, Dust cover, DVD Player, Printer (Epson C90, HP 1460), Flash Drive (1GB, 2GB, 4GB)

| JAFFNA | NELLIADY | CHAVAKACHCHERI |
|---|---|---|
| MARSHA SYSTEMS (PVT) LTD, # 74, Kannathiddy Junction, Jaffna. T.P:- 0212229418, 0777667108 | TEKNEL COMPUTERS & TECHNOLOGY, 364,364, Kodikamam Road, Nelliady. T.P:- 07777069934 | SCOT COMPUTER CENTRE, Katkuly 1st Lane, Post Office Road, Chavakachcheri. T.P:- 0776701394 |


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.